RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com
www.aaxelinsurance.com
AAXEL

மலர்:- 28, 25 மார்ச் 2022 இதழ்:- 48

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd,
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

ஈழநாடு மின்னிதழ்
eelanadu.ca

# இலங்கையின் பொருளாதார நெருக்கடியால் தமிழ்நாட்டிற்குத் தப்பிச் செல்லும் தமிழர்கள்

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சி மற்றும் கடும் விலை உயர்வு காரணமாக இலங்கை தமிழர்கள் தமிழகத்திற்கு அகதிகளாக வர தொடங்கியுள்ள நிலையில் ஒரே நாளில் 4 குடும்பத்தை சேர்ந்த 16 பேர் அகதிகளாக தனுஷ்கோடி வந்துள்ளனர். தமிழகத்திற்கு அகதிகளாக வந்தவர்கள் மீது மெரைன் போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். (9ம் பக்கம் பார்க்க)



GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund
Desjardins
Manulife
Foresters

## புலம் பெயர்ந்த இலங்கையர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும்!

## கோத்தாவிடம் அமெரிக்கப் பிரதிநிதி வலியுறுத்தல்!



BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BUY/SELL HOUSES
ARUL
THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

கனடியத் தமிழ்ச் சமூகத்தின் ஆதரவோடு 10வது ஆண்டில் அறப்பணி!
போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial




## Team SIVA WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



HOMELIFE HIGHER STANDARDS

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
**Bus: 416.298.3200**
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Warden/St Clair

**Scarborough $599,900**
Bedrooms: 2+1 Washrooms: 1
Step To Warden Subway Station

### Warden Ave/Lawrence Ave

**Scarborough $649,000**
Bedrooms: 2 Washrooms: 2
Steps To Ttc, Direct Bus To Subway

### Simcoe St N/Conlin Rd

**Oshawa $690,000**
Bedrooms: 2 Washrooms: 2
3-Storey Corner Town-Home

### Eglinton/Markham

**Scarborough $725,000**
Bedrooms: 3 Washrooms: 2
Renovated W/O To The Balcony

### Park /Phillip Murray

**Oshawa $899,000**
Bedrooms: 3+1 Washrooms: 2
52Ft Frontage! Close Lake

### Rossland / Ravenscroft

**Ajax $899,000**
Bedrooms: 3+1 Washrooms: 3
Huge Open Concept Kitchen

### Main & Baker Hill

**Stouffville $899,000**
Bedrooms: 2 Washrooms: 3
Bright & Spacious End Freehold

### John W Taylor/Ferris Lane

**New Tecumseth $1,079,000**
Bedrooms: 4 Washrooms: 3
Hardwood Floors, Open Concept

### Salem Rd/Thackery Dr

**Ajax $1,109,000**
Bedrooms: 3 Washrooms: 3
Hardwood Floors, Fin. Basement

### S. Wood Pkwy/ Edenbrook Hill

**Brampton $1,399,999**
Bedrooms: 3 Washrooms: 3
Open Conceptl/O For Entertaining!

### Markham/Ellesmere

**Scarborough $1,299,999**
Bedrooms: 4+2 Washrooms: 5
Newly Renovated

### Ellesmere/Conlins

**Scarborough $1,299,999**
Bedrooms: 4+1 Washrooms: 4
Basement W/Separate Entrance

### Ellesmere/Birchmount

**Scarborough $539,000**
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Layout

### Morningside/ Ellesmere

**Scarborough $399,000**
Bedrooms: 1 Washrooms: 1
Walking Distance To Ut Scarborough

### Finch/Middlefield


**Scarborough $1,350**
Bedrooms: 1 Washrooms: 1
Sep.Entrance basement For Rent.

### Birchmount/Ellesmere


**Scarborough $1,200**
Bedrooms: 1 Washrooms: 1
Seperate Entrance, Basement Apart.

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com




## கியூபாவிற்கான சுற்றுலா

கனடாவிலிருந்து குளிர்காலச் சுற்றுலாவுக்காக உங்களை பாதுகாப்பாக
கியூபாவுக்கு அழைத்துச் செல்கின்றோம்.
உங்கள் விமானச் செலவு, தங்குமிட வசதிகள் உட்பட அனைத்துச் செலவு (Pakcage)
உடன் மேலதிகமாக 400.00 டொலர்கள் மட்டுமே!
இத்தொகையில் ஊர்க்கோழி, ஆட்டுக்கறி, கடலுணவு வகைகள், நமது முறைப்படி சமைத்து
நீங்கள் தங்கியிருக்கும் இடத்திற்கே கொண்டு வந்து தருவதுடன் குதிரைச் சவாரி,
5க்கும் மேற்பட்ட சுற்றுலாத் தலங்களையும் பார்வையிடலாம்.

முதியோருக்கான விசேட கவனிப்பு

மேலதிக விபரங்கட்கு - தவா
647.469.9839/647.333.0098



04 ஜனவரி 2022, 25 ஏப்ரல் 2022 இரண்டு சுற்றுலா குழ புறப்படுகின்றது. பதிவு செய்து கொள்ளுங்கள்


### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரணஅறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

2 JAFFNA SUPER STORES
1221 MARKHAM RD - 14
(MARKHAM / EELESMERE)

3 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)

4 AGP MART
4A WADE AVE
TORONTO

5 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

6 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

### மொன்றியல் தொடர்புகளுக்கு
### மார்சே துர்க்கா
### (514) 276 9262

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன் கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# புலம் பெயர்ந்த இலங்கையர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும்! கோத்தாவிடம் அமெரிக்கப் பிரதிநிதி வலியுறுத்தல்



அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அரசியல் விவகாரத்திற்கான துணை இராஜாங்க செயலாளர் விக்டோரியா நியுலாண்ட் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவை 23 மார்ச் 2022 புதன்கிழமை சந்தித்து பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டார்.

தமிழ்தேசிய கூட்டமைப்பை வெள்ளிக் கிழமை சந்திக்கவுள்ளமை உட்பட பல விடயங்கள் குறித்து ஜனாதிபதி துணை இராஜாங்க செயலாளருக்கு தெளிவுபடுத்தினார். இந்த சந்திப்பின் போது அமெரிக்கா கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் உள்ள புலம்பெயர்ந்த இலங்கையர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற் கொள்ள வேண்டியதன் அவசியத்தை துணை இராஜாங்க செயலாளர் வலியுறுத்தினார்.

புலம்பெயர்ந்த சமூகத்தினருடன் பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ள தான் தயாராக உள்ளதாக தெரிவித்த ஜனாதி பதி வடமாகாண அபிவிருத்தியில் முதலீடு செய்ய அவர்களை அழைப்ப தாக தெரிவித்தார்.

அமெரிக்காவின் பசுமை தொழில்நுட்பத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதாக தெரிவித்த துணை இராஜாங்க செயலாளர் சைபர் மற்றும் தகவல்தொழில்நுட்ப துறைகளில் இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

நாட்டின் கல்வி வசதிகள் குறித்து கவனம் செலுத்திய அவர் கல்வித் துறையில் தனியார் துறையினரின் பங்களிப்பு உயர் கல்வி வாய்ப்புகளை அதிகரிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார். உண்மையை கண்டறியும் பொறிமுறை குறித்தும் விக்டோரியா நியுலாண்ட் வலியுறுத்தினார்.

# கூட்டமைப்பைச் சந்திக்கும் ஜனாதிபதியின் முடிவு மிக முக்கியமானது என அமெரிக்கா வரவேற்பு!



இலங்கை ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தமிழ்தேசிய கூட்டமைப்பினை சந்திக்கவுள்ளதை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களிற்கான துணை இராஜாங்க செயலாளர் விக்டோரியா நூலண்ட் வரவேற்றுள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பை சந்திக்கும் ஜனாதிபதியின் முடிவு மிக முக்கியமான ஒன்று அதனை நாங்கள் வரவேற்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளதை போல 25 மார்ச் 2022 வெள்ளிக்கிழமை தமிழ்தேசிய கூட்டமைப்பை சந்திக்கும் ஜனாதிபதியின் முடிவு மிக முக்கியமான ஒன்று அதனை நாங்கள் வரவேற்கின்றோம்.

உலக வரலாற்றில் நெருக்கடியான வரலாற்றை கொண்ட பல நாடுகள் செயற்பட்டதை போல உண்மையை கண்டறியும் பொறிமுறையை அமைக்கும் எண்ணம் குறிப்பாக தென்னாபிரிக்க அனுபவத்தை பயன்படுத்தும் யோசனை மிகச்சிறந்தது அதற்கு ஆதரவளிப்பது குறித்து ஆர்வமாக உள்ளோம்.

அரச சார்பற்ற அமைப்பை சேர்ந்தவர்கள் பத்திரிகையாளர்கள் சிவில் சமூகத்தினர் மீதான கண்காணிப்பை-தடுத்து வைத்தலை- துன்புறுத்தல்களை முடிவிற்கு கொண்டு வர வேண்டியதை நாங்கள் வலியுறுத்த விரும்புகின்றோம். நாங்கள் சிவில் சமூக தலைவர்களை சிவில் சமூக பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளமை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்,

மாகாணசபைதேர்தல்களையும் ஜனநாயக சூழலை மேலும் விரிவுபடுத்துவதையும் நாங்கள் வரவேற்கின்றோம். ஒட்டுமொத்தத்தில் நான் வெளிவிவகார அமைச்சரையும் நீதியமைச்சருடனான அவருடைய இணைந்த செயற்பாடுகளையும் நீதி மற்றும் தேசிய காயத்தை ஆற்றுதல் தொடர்பான விடயங்களை முன்னோக்கி நகர்த்துவதற்காக பாராட்ட விரும்புகின்றேன் என்றும்குறிப்பிட்டுள்ளார்.


## Balachandran Law Office
### Balachandran Muthaiah
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# விஜயன் இலங்கைக்கு வராவிட்டால் பிரச்சனை இருந்திருக்காது என்ற முடிவுக்கு வரவேண்டி வரும் - ரணில்






தற்போதைய பொருளாதார நெருக்கடி குறித்து விவாதித்து தீர்வு காண சர்வ கட்சி மாநாடு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் 23 மார்ச் 2022 இடம் பெற்றது. இதில் மத்திய வங்கி ஆளுநரின் கருத்துக்கு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடும் பதிலடி கொடுத்துள்ளார்.

மாநாட்டில் உரையாற்றிய கப்ரால், இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி குறித்து அரசியல் கட்சிகளுக்கு விளக்கமளித்ததுடன், தற்போதைய நிலைமைக்கு முன்னாள் அரசாங்கம் மீது பழி சுமத்தியுள்ளார்.

கப்ராலின் பேச்சு குறித்து கருத்து தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு மாநாட்டில் அரசியல் பேசியதற்காக கப்ராலை கடுமையாக சாடினார்.

பொருளாதார நெருக்கடி குறித்து ஆலோசிக்கவே இந்த மாநாடு கூட்டப்பட்டதாக கூறியுள்ள முன்னாள் பிரதமர், இது பழிவாங்கும் விளையாடும் இடம் அல்ல என்றார். இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முன்னாள் அரசாங்கத்தின் தவறுகளினால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டது என்று தனது உரையை ஆரம்பித்துள்ளமை வருத்தமளிப்பதாக அவர் மேலும் தெரி வித்தார்.

முன்னாள் அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் அரசாங்கத்திற்கு தெரியும். அரசியல் வேறுபாடுகளுக்காக மீண்டும் ஒருமுறை சண்டையிட்டு ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதற்காக நாங்கள் இன்று இங்கு வரவில்லை. நாங்கள் அரசியல் பேச்சுக்காக இங்கு வரவில்லை. இதைத் தொடர்ந்தால் விஜய மன்னன் இலங்கைக்கு வருவது பற்றிய விவாதத்தில் முடிந்துவிடும். அவர் இலங்கைக்கு வரவில்லையென்றால் எந்தப் பிரச்சினையும் இருந்திருக்காது எனத் தோன்றுகிறது என நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

நாங்கள் வேறு கொள்கையில் சென்று கொண்டிருந்தோம் அந்தக் காலத்தில், பெற்றோல் இருந்தது மக்களுக்கு சாப்பிடவும் இருந்தது. எதிர்க்கட்சியில் ஒரு பிரிவினர் வரவில்லை. நான் வந்திருக்கின்றேன். அவர்களை தோல்வியுறச் செய்வதற்காக நான் இவ்விடத்துக்கு வரவில்லை. அவர்களையும் இணைத்துக்கொண்டு பயணிப்போம்.

அதன்பின்னர் கருத்துரைத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, உங்களுடைய மனது நோகுமாறு ஏதாவது காரணத்தை தெரிவித்திருந்தால் அதற்காக மன்னிப்பு கேட்டுக்கொள்கின்றேன். யார் மீதும் குற்றஞ் சாட்ட வரவில்லை, உண்மையில் பிரச்சினைக்குத் தீர்வு காணவும், சகலருடைய கருத்துகளையும் கேட்டுக் கொள்ளவே அழைத்தேன் என்றார்.

## பசிலை கேள்விகளால் துளைத்தெடுத்த ரணில்

ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் 23 மார்ச் 2022 நடைபெற்ற சர்வக்கட்சி மாநாட்டில், நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடையில் சுவாரஸ்யமான வாக்குவாதம் இடம் பெற்றது. ரணில் சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் வினவினார். அதற்கு பதிலளித்த அமைச்சர் பசில் அவர்கள் இன்னும் அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை என்றார்.

குறிக்கிட்ட ரணில் அப்படியாயின் எந்த ஆவணத்தின் அடிப்படையில் பேச்சு நடத்துகின்றீர்கள். ஜனாதிபதி அவர்களே! நாணய நிதியத்தின் அதிகாரிகள் இருந்தால் இவ்விடத்துக்கு அழையுங்கள் எனக் கேட்டார்.

பதிலளித்த பசில் என்னை விட உங்களுக்கு நன்றாகத் தெரியும். முதலில் எங்களுக்கு அறிக்கையை சமர்பிக்க மாட்டார்கள் ஒருவரைபை தான் தருவார்கள் என்றார்.

குறுகிட்ட ரணில்அறிக்கை இல்லையென்கின்றீர்கள் தற்போது வரைபு கிடைத்துள்ளது என்கின்றீர்கள். அப்படியாயின் அதனை தாருங்கள் என்றார்.

பதிலளித்த பசில் அறிக்கை உங்களுக்கு வேண்டுமா? வரைபு உங்களுக்கு வேண்டுமா? எனக் கேட்டார். எனினும் அறிக்கையோ வரைபோ எனக்கு வேண்டாம் அதனை பாராளுமன்றத்தில் ஆற்றுப்படுத்துங்கள் என ரணில் கேட்க அதற்கு மறுப்புத் தெரிவித்த பசில் ராஜபக்ஷ அதனை



தன்னால் சமர்பிக்க முடியாது எனக் கூறி விட்டார்.

மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கே எதிர்ப ார்த்துள்ளோம். இதன்படி எதிர்வரும் தமிழ் சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் நாங்கள் வரவு செலவுத் திட்டத்தை திருத்த எதிர்பார்த்துள்ளோம். நாங்கள் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவோம்.


A C TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

மெக்சிக்கோ சுற்றுலா



ஒவ்வொரு மாதங்களிலும், மூன்றாவது கிழமைகளிலும், மெக்சிகோவில் உள்ள வேறு மாவட்டங்களுக்கும் வேறு நகரங்களுக்கும் 2022 தை மாதம் தொடக்கம், மார்கழிமாதம் வரை. 7 நாட்களுக்கு யாவும் உள்ளடக்கப்பட்டது.

| 3 star | 3½ star | 4 star | 4½ star | 5 star |
|---|---|---|---|---|
| REGULAR C$1,250 | REGULAR C$1,500 | REGULAR C$1,750 | REGULAR C$2,000 | REGULAR C$2,250 |
| SALE PRICE C$ 1,000.00 | SALE PRICE C$ 1,250.00 | SALE PRICE C$ 1,500.00 | SALE PRICE C$ 1,750.00 | SALE PRICE C$ 2,000.00 |

நல்ல சேவைக்கு விளம்பரம் தேவையில்லை. மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக ஒருமுறை மட்டும் தான் வரும் விளம்பரத்தை எடுத்து வைக்கவும்.

a1actour.com@gmail.com

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு ஒருவருக்கு (7 நாட்கள்) ஒரு கிழமை சுற்றுலாவுக்கு இந்த விலை

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது

விமான சீட்டு | தங்குமிட வசதி | விமான நிலையத்திற்கும் தங்குமிடத்திற்கும் பேருந்து சேவை

காலை உணவு | மதிய உணவு | இரவு உணவு | மது பானம் | குளிர்பானம் | சுடுபானம்

முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide,மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8

FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER

www.a1actour.com
facebook.com/Allcountriestour

CANADA - TEL : 1 416 644 7273 CELL : +1 416 857 5252 +1 416 272 9007
CUBA - CELL & WHATSAPP +53 55 591 557 +53 52 978 956

# 30வருட விடுதலைப் போராட்ட காலத்தை இருண்ட யுகமென விமர்சிக்க மகிந்தாவுக்கு அருகதையில்லை - அருள்ஜெயேந்திரன்

கடந்த 30 வருடங்களாக தமிழர் தாயகத்தில் தமிழ் இளைஞர் யுவதிகள் பிரபாகரன் தலைமையில் போராடினர். அத்தகைய 30 வருட விடுதலைப் போராட்டத்திற்கான காலத்தை இருண்ட யுகமென விமர்ச்சிக்க இலங்கை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு அருகதை இல்லை என அகில இலங்கை மக்கள் எழுச்சிக் கட்சியின் தலைவர் அருள் ஜெயேந்திரன் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் 20 மார்ச் 2022 திங்கட்கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

30 வருடங்களாக உரிமைக்காக போராடிய நாங்கள் கௌரவமாக வாழ்ந்தோம். ஆனால் அதனை இருண்ட யுகம் என்கிறார் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, உண்மையில் இருண்ட யுகமென்பது வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்களை, கைகளை கட்டி பின்புறத்தால் சுட்டீர்களே அதுவே இருண்ட யுகம். வகை தொகையற்று சரணடைந்தவர்களை காணாமல் ஆக்கியுள்ளீர்களே அதுவே இருண்ட யுகம்.

இப்போது அவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களிற்கு வெட்கமற்று ஒரு இலட்சம் ரூபா தரப் போவதாக சொல்கிறீர்கள். நான் பகிரங்கமாக சவால் விடுகின்றேன். தென்னிலங்கையை சேர்ந்த உங்கள் பிள்ளைகளை எங்களிடம் ஒப்படையுங்கள். நாங்கள் எத்தனை பேரோ அவ்வளவு பேருக்கும் இலட்சக் கணக்கில் உதவ தயார்.

உண்மையில் காணாமல் ஆக்கப்பட்டோரது குடும்பங்கள் கோருவது தங்கள் பிள்ளைகளிற்கு என்ன நடந்தது என்பதையே. அவர்களை கொன்று புதைத்திருந்தால் எப்போது எங்கே கொன்று புதைத்தீர்கள்?



எதற்காக கொன்று புதைத்தீர்கள் என்பதையாவது சொல்லி விடுங்கள்.

தமிழ் மக்களது விடுதலைப் போராட்டம் நடந்த போதும் என்றுமே சிங்கள மக்களது பொருளாதார இலக்குகள் கைவைக்கப்படவில்லை. மூவின மக்களும் பொருளாதார ரீதியாக மேம்பட்டேயிருந்தனர். ஆனால் இன்றோ பஞ்சத்தை ராஜபக்ஷர்கள் கொண்டு வந்து அனைத்து மக்களையும் நடுவீதியில் நிறுத்தியிருக்கிறார்கள் என்றார்.

# மகிந்தாவை வரவேற்க கட்டப்பட்டிருந்த பதாகைகளை எரித்து எதிர்ப்பை வெளிப்படுத்திய உறவுகள்!



பிரதமர் மகிந்தாவை வரவேற்கும் முகமாக கட்டப்பட்டு இருந்த பதாகைகளை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் எரித்து தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

யாழ்ப்பாணத்திற்க்கு இரண்டு நாள் விஜயமாக வருகை தந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ச 20 மார்ச் 2022 திங்கட்கிழமை காலை மட்டுவிலில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையத்தினை திறந்து வைத்தார்.

குறித்த நிகழ்வுக்கு பிரதமர் வருவதனை எதிர்த்து பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் உள்ளிட்டோர் எதிர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுக்க முயன்றனர்.

நிகழ்வு நடைபெறும் இடத்தில் போராட்டத்தினை முன்னெடுக்க முல்லைத்தீவில் இருந்து வந்திருந்தவர்களை மட்டுவில் அம்மன் ஆலயத்திற்கு அருகில் பொலிஸார் தடுத்து நிறுத்தி வாகனத்தில் இருந்து இறங்காதவாறு தடுத்து நிறுத்தி இருந்தனர். அதேவேளை யாழில் இருந்து சென்ற வேலன் சுவாமிகள் உள்ளிட்டோர் மட்டுவில் வண்ணாத்தி பாலம் பகுதியில் தடுத்து நிறுத்திய பொலிஸார் அவர்களையும் வாகனத்தில் இருந்து இறங்காதவாறு தடுத்து நிறுத்தி இருந்தனர்.

இதேவேளை பொலிசாரின் காவலையும் மீறி பேருந்தில் இருந்து இறங்கிய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வீதியில் அழுது புரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மத்திய நிலைய பகுதியில் பெருமளவான பொலிஸார் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் நிகழ்வினை முடித்துக் கொண்டு பிரதமர் நிகழ்விடத்தில் இருந்து புறப்பட்டதும் போராட வந்தவர்களை பொலிஸார் செல்வதற்கு அனுமதித்தனர். அதனை அடுத்து வாகனத்தில் இருந்து இறங்கிய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உள்ளிட்டோர் பிரதமரை வரவேற்று கட்டப்பட்டு இருந்த பதாகைகளை கிழித்து தீயிட்டு எரித்து தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினரர்.

# தமிழர்களுக்கு எதுவும் இல்லையென்றவர்கள்?

இலங்கையின் பொருளாதாரம் அதலபாதாளத்தை நோக்கி சரிந்து கொண்டிருக்கின்றது. திட்டமிடப்படாத மக்கள் கிளர்ச்சிகள் தோன்றக்கூடுமென்று புலனாய்வு பிரிவு எச்சரித்திருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. மண்ணெண்ணெய் வாங்குவதற்காக வரிசையில் நின்றதால் இதுவரையில் இரண்டு முதிவர்கள் இறந்திருக்கின்றனர். இந்த நிலையில் மக்கள் ஆவேசப்படுவது இயல்பான ஒன்றே. நெருக்கடி நிலைமை அதிகரித்துச் செல்லும் நிலையில் தான் அரசாங்கம் சர்வகட்சி மாநாட்டை கூட்டியிருக்கின்றது.

உண்மையில் யுத்தம் நிறைவுற்றதை தொடர்ந்து மஹிந்த ராஜபக்க்ஷ தமிழ் மக்களின் தேசிய பிரச்சனைக்கு நியாயமான தீர்வை கண்டிருக்க வேண்டும். கூட்டமைப்புடன் 19 சுற்று பேச்சுக்களை நடத்திய போதிலும் மஹிந்த ராஜபக்ஷ பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு முயற்சிக்கவில்லை. ஒரு உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்தவுடன் செய்ய வேண்டிய முதல் பணி அந்த யுத்தத்துக்கான காரணங்களை ஆராய்ந்து மீண்டுமோர் இன முறுகல் நிலைமை ஏற்படுவதை தடுக்கும் நோக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாய மான தீர்வைக் காண வேண்டும் அனைத்து மக்களையும் தேச நிர்மாணத்தில் சமமாக உள்வாங்கிக் கொள்ளும் வகையில் செயல் பட்டிருக்க வேண்டும். ஆனால் யுத்த வெற்றியை கொண்டாடுவதில் காண்பித்த ஆர்வத்தில் ஒரு சிறு பங்கைக் கூட பிரச்னையை தீர்க்க வேண்டுமென்பதில் மஹிந்த ராஜபக்ஷ காண்பிக்கவில்லை.

இலங்கைத் தீவில் ஒரு துண்டு நிலத்தைக் கூட தமிழ் மக்களுக்கு வழங்குவதில்லையென்னும் இறுமாப்பில் இருந்தனர். பண்டா — செல்வா ஒப்பந்த காலத்திலிருந்து தமிழ் மக்களின் ஆகக் குறைந்த கோரிக்கைகளுக்குக் கூட இலங்கையின் சிங்கள ஆட்சியாளர்கள் எவரும் காது கொடுக்கவில்லை. இதன் விளைவாகத் தான் தமிழ் ஆயுத கிளர்ச்சி ஒன்று ஏற்பட்டது. அது ஓர் உள்நாட்டு யுத்தமாக பரிணமித்தது.

தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்பதையும் அவர்களுக்கென்று வரலாற்று வாழ்விடமொன்றுண்டு என்பதையும் எப்படியாவது இல்லாமலாக்கி விட வேண்டும் என்பதிலேயே சிங்கள ஆளும் வர்க்கம் திடசங்கற்பம் பூண்டிருந்தனர். இதில்இ எந்தக் கட்சியும் ஒன்றை விட மற்றொன்று குறைந்ததல்ல.

அமைதியைப் போதிக்க வேண்டிய பௌத்த மகா சங்கத்தினரும் சிங்கள பெருந்தேசியவாத அரசியலுக்கு உரமிடுபவர்களாகவே இருந்தனர். இருக்கின்றனர். இந்த சிங்கள இறுமாப்பின் விளைவே இலங்கையின் இன்றைய நிலைமை.

இந்த நாடுகளை இனி எவர் நினைத்தாலும் வெளியாரின் செல்வாக்கிலிருந்து மீட்க முடியாது. தமிழர்களுக்கு மட்டும் எதனையும் கொடுக்க மாட்டோமென்னும் சிங்களத்தின் விரதத்தால் எதைச் சாதிக்க முடிந்தது?

போர் வெற்றியால் நாட்டை சுபீட்சமான பாதையில் கொண்டு செல்ல முடிந்ததா? ஏதாவது ஒரு விடயத்திலா வது முன்னேற்றத்தைக் காண்பிக்க முடிந்ததா?

அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்திலுள்ள விடயங்களைக் கூட சிங்கள ஆட்சியாளர்கள் நிறைவேற்ற முன்வரவில்லை.

ஏனெனில் ஒரு சிறு வாய்ப்பையும் தமிழர்களுக்கு வழங்கி விடக் கூடாது. இந்த பெருந்தேசியவாத சிங்கள அரசியல் கலாசாரம் சிங்கள மக்களுக்கு பெற்றுக் கொடுத்தது என்ன?

Real Estate Law
Immigration Law
Wills and Estate
Power of attorney for personal care and property
Business Law
Notary Services
Statutory Declarations & Affidavits
Commissioning & Notarization
NISHANTHAN LAW OFFICE
Phone : 416-289-9229
Umananthini Nishanthan
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC

1200 Markham Road, Lower Level Units 5 and 7, Scarborough, Ontario M1H 3C3 (Markham/ Ellesmere)

# இலங்கையில் உச்சத்தைத் தொட்ட உணவுப் பஞ்சம்! தமிழகத்திற்கு அகதிகளாகச் செல்லும் இலங்கை மக்கள்!



இலங்கையில் நிலவும் பஞ்சம் காரணமாக அந்நாட்டை சேர்ந்த சிலர் தனுஷ் கோடி பகுதிக்கு படகு மூலம் அகதிகளாக வந்து தஞ்சம் அடைந்துள்ளனர். இந்த சம்பவம் பெரிய பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

வரலாற்றில் இல்லாத அளவிற்கு இலங்கையில் மிக மோசமான பொருளாதார சரிவு ஏற்பட்டுள்ளது. டாலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு 264.4 என்ற அளவிற்கு சரிந்துள்ளது. அந்நாட்டு வரலாற்றில் கடந்த 75 வருடங்களில் இல்லாத நிலைக்கு பொருளாதாரம் நலிவடைந்துள்ளது.

இலங்கையில் ஒரு லிட்டர் பெட்ரோல் விலை 207.00 ரூபாயாக உள்ளது. சில இடங்களில் இது 250 ரூபாயை தாண்டி விற்கிறது. ஒரு லிட்டர் டீசல் விலை 159.00 ரூபாயாக உள்ளது

இதனால் ஒரே வாரத்தில் இரண்டு முறை சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை உதவி கேட்டு கையேந்தும் நிலைக்கு சென்று விட்டது. அதேபோல் இலங்கையில் கடுமையான மின்சார தடையும் ஏற்பட்டுள்ளது. எரிவாயு, எரிபொருள் வரை அனைத்து பொருட்களுக்கும் விலை அங்கே ஏறிவிட்டது. இலங்கையில் ஒரு கிலோ சம்பா அரிசி விலை 210 ரூபாய் ஆகும்.

அதேபோல் 1 கிலோ துவரம் பருப்பு விலை 380 ரூபாய் ஆகும். கோழி ஒரு கிலோ ஆயிரம் ரூபாய். முட்டை ஒன்று 40 ரூபாய்க்கு விற்பனை செய்கிறது. கேஸ் சிலிண்டர் வாங்க மக்கள் பல கிலோ மீட்டர் லைனில் நிற்கும் அவலம் ஏற்பட்டுள்ளது. இந்த அவலம் காரணமாக பிரதான எதிர்க்கட்சியான எஸ்ஜேபி எனப்படும் Samagi Jana Balawegaya அங்கு போராட்டம் நடத்தி வருகிறது. மக்களும் இந்த போராட்டங்களில் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் தான் இலங்கையில் நிலவும் பஞ்சம் காரணமாக அந்நாட்டை சேர்ந்த சிலர் தனுஷ் கோடி பகுதிக்கு படகு மூலம் அகதிகளாக வந்து தஞ்சம் அடைந்துள்ளனர். இந்தியா இலங்கை இடையே 13 மணல் திட்டு உள்ள பகுதியில் இன்று கடலோர காவல்படையினர் ரோந்து பணிகளை செய்து வந்தனர். அப்போது தனுஷ் கோடி மூன்றாம் மணல் திட்டு பகுதியில் 1 ஆண், 2 பெண்கள், ஒரு கை குழந்தை, 2 சிறுவர்கள் உட்பட 6 பேர் அங்கு இருந்தது கண்டு பிடிக்கப் பட்டது. இவர்களை உடனே கடலோர காவல்படையினர் மீட்டு க்யூ பிரிவு போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

இவர்களிடம் க்யூ பிரிவு போலீசாரிடம் விசாரணை நடத்திய நிலையில் பஞ்சம் காரணமாக இவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தது கண்டு பிடிக்கப்பட்டது. போலீசார் விசாரணையில் அவர்கள் அளித்த வாக்குமூலத்தில், இலங்கையில் அத்தியாவசிய பொருட்கள் கிடைக்கவில்லை. உணவு கிடைக்கவில்லை, குழந்தைகளுக்கு பால் கொடுக்க கூட முடியவில்லை. விலைவாசி அதிகமாகி விட்டது. வேலையும் கிடைக்கவில்லை. தமிழ்நாட்டிற்கு வந்தால் தப்பித்துக் கொள்ளலாம். இங்கே ஏதாவது வேலை செய்து பிழைக்கலாம் என்று நம்பி வந்தோம் என்று அவர்கள் விசாரணையில் கூறியுள்ளனர். ஆனால் இவர்கள் இலங்கையில் இருக்கும் தமிழர்களா அல்லது சிங்களர்களா என்ற விவரம் இன்னும் முழுமையாக வெளி வரவில்லை. இவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு வந்த இவர்களுக்கு முதலில் உணவு கொடுக்கப்பட்டது.

எல்லோருக்கும் உணவு கொடுக்கப் பட்டது. கை குழந்தைக்கு பால் தரப் பட்டது. இலங்கையில் நிலவும் பொருளாதார தட்டுப்பாடு காரணமாக இலங்கையில் இருக்கும் மேலும் பலர் தமிழ் நாட்டிற்கு தப்பித்து வர வாய்ப்பு உள்ளதாக க்யூ பிரிவு போலீசாருக்கு தகவல்கள் வந்துள்ளன. யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பகுதிகளில் இருந்து பலர் இங்கே வரலாம் என்றும் போலீசாருக்கு தகவல் வந்துள்ளது. இதனால் இங்கு ரோந்து பணிகளை கடலோர காவல் படையும், உளவுத்துறையும் அதிகரித் துள்ளதாக கூறப்படுகிறது.

## பயங்கரவாத திருத்தச் சட்டமூலம் 51 வாக்குகளால் நிறைவேற்றம்

பயங்கரவாதத் தடுப்பு தற்காலிக ஏற்பாடுகள் திருத்தச் சட்ட மூலம், பாராளுமன்றில் 51 மேலதிக வாக்குகளால் சற்று முன்னர் நிறைவேற்றப்பட்டுள்ளது. பாராளுமன்ற அமர்வு 22 மார்ச் 2022 மு.ப 10.00 மணிக்கு ஆரம்பமாகிய நிலையில் முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை பயங் கரவாதத் தடுப்பு தற்காலிக ஏற்பாடுகள் திருத்தச் சட்ட மூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் நடை பெற்றது. அதன் பின்பு திருத்தச் சட்டமூலம் வாக்கெடுப்புக்கு விடப் பட்டது. இதற்கு ஆதரவாக 86 வாக்குகளும் எதிராக 35 வாக்குகளும் பதிவாகின. ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்டமூலத்துக்கு எதிராக வாக்களித்துள்ளனர்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# தமிழர் பலத்தை சிதைக்கும் முயற்சி!





கட்சி அரசியல் ரீதியாகத் தமிழர்களைப் பலவீனப்படுத்தும் நிகழ்ச்சி நிரல் ஒன்று முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் மத ரீதியாகவும் தமிழர்களைப் பிளவுபடுத்தும் நுணுக்க மான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தமிழகத்தில் பெரியாரின் வழி வந்த திராவிடக் கட்சிகள் கோலாச்சினாலும், சாதிய அரசியலில் இருந்து அவர்களால் விடுபட முடியவில்லை. அது போன்ற நிலையை வடக்கு, கிழக்கிலும் ஏற்படுத்துகின்ற முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

ஆயுதப் போராட்ட காலத்தில், தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிளவுபடுத்துகின்ற நுணுக்கமான அரசியல் முன்னெடுக்கப்பட்டது.

முஸ்லிம்கள் மத்தியில் இருந்த பலவீனங்களைப் பயன்படுத்தி, அவர்களில் சிலரைத் தமிழர்களுக்கு எதிராகத் திருப்பி விட்டு, விடுதலைப் புலிகளை அவர்களுடன் மோதவிட்டு, பாரிய இடம் பெயர்வு மற்றும் படுகொலைகள் போன்ற இன்னல்களுக்கும் வழி வகுக்கப்பட்டது. தமிழ், முஸ்லிம் இனங்களுக்கிடையிலான உறவு சிதைக்கப்பட்டதன் விளைவை இரு இனங்களும் இன்னும் அனுபவிக்கின்றன.

கிறிஸ்தவ ,இந்து மதங்களைப் பின்பற்றும் மக்கள் ஆயுதப் போராட்ட காலத்தில் ஒன்றித்து வாழ்ந்தாலும், பிளவுகளை ஏற்படுத்தும் சதிகளை முறியடித்து நகர்ந்தாலும், தற்போது அந்த உறவுக்குப் பெரும் சவால் உருவாகியுள்ளது.

கடந்த வாரம், தமிழகத்துக்குச் சென்றிருந்த கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். அந்தச் சந்திப்பு தொடர்பான படங்களுடன் அண்ணாமலை சமூக ஊடகங்களில் தகவல் பகிர்ந்திருந்தார்.

அதற்கு அடுத்த நாள் சென்னையில் இந்து மக்கள் கட்சியை சேர்ந்த சிலர், ராஜபக்ஷவின் கையாள் சுமந்திரனே வெளியேறு என்ற போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒரு பக்கத்தில் இந்து தீவிர வலதுசாரி கட்சியான பா.ஜ.க.வின் தமிழகத் தலைவர், சுமந்திரனைச் சந்தித்துப் பேசுகிறார், இன்னொரு பக்கத்தில் இந்துத்துவ அமைப்பு ஒன்று ராஜபக்ஷவின் கையாள் என்று சுமந்திரனை வெளியேறு என்கிறது.

இலங்கையில் தமிழர்களின் உரிமைப் போராட்டம் சார்ந்த விடயத்தை, மதச் சாயம் பூசுவதில் இந்தியத் தரப்புகள் சில குறியாக இருக்கின்றன.

சுமந்திரனை வெளியேறக் கோரி நடத்தப்பட்ட போராட்டத்துக்குப் பின்னால் ஒரு மதவாத அரசியல் நோக்கமே இருந்தது.

சுமந்திரன் விடயத்தில் மாத்திரமல்ல, விடுதலைப் புலிகளின் காலத்தில் கூட, இவ்வாறான அணுகுமுறை ஒன்று காணப்பட்டது. இலங்கையில் தமிழர்கள் பெரும்பான்மையினர் இந்துக்களாக இருந்த போதும், அவர்களின் போராட்டத்தை அங்கீகரிக்க இந்துத்துவ அமைப்புகள் தயங்கியமைக்கு முக்கிய காரணமாக சொல்லப்பட்டது, அன்ரன் பாலசிங்கம் விடுதலைப் புலிகளின் பேச்சாளராக இருக்கிறார் என்பது தான்.

அவர்கள் சுமந்திரனையும், அன்ரன் பாலசிங்கத்தையும், ஒரு இனத்தின் பிரதிநிதியாக பார்க்க மறுக்கிறார்கள். அவர்களின் மத நம்பிக்கைகளை வைத்தே, எடை போட முனைகிறார்கள்.

மத அரசியலை முன்னிறுத்தி விடுதலைப்புலிகள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தால் இந்தியாவில் பெரியளவில் இந்துக்களின் ஆதரவை அவர்களால் பெற்றிருக்க முடியும் என்ற கருத்து இன்றளவுக்கும் பலரிடம் உள்ளது.

ஆனால் ஆயுத போராட்ட காலத்தில் மத ரீதியான பிளவுகளுக்கு இடமளிக்காமல் விடுதலைப்புலிகள் போராட்த்தை முன்னெடுத்திருந்தனர். அந்தப் போராட்டத்துக்கு கிறிஸ்தவ மக்களும் அவர்களின் மத நிறுவனங்களும் உறுதுணையாகவும் இருந்தன. இவ்வாறான நிலையில் தற்போது இந்துக்களையும் கிறிஸ்தவ்ரகளையும் பிரிக்கும் சதி ஒன்று முன்னெடுக்கப்டுகின்றது. போர்க் காலத்தில் வடக்கிலுள்ள இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளுடன் ஒன்றிணைந்து நின்றனர். தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தில் பெரும் பங்கு வகித்தளர்.

மலையகத்தில் இருந்தும் ஏனைய இடங்களில் இருந்தும் இனக்கலவரங்களால் வெளியேறிய அவர்கள் கிளிநொச்சி வவுனியா போன்ற பகுதிகளில் அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர்.

போர் முடிவுக்கு வந்த பின்னர் தமிழ்த் தேசிய அரசியலில் இருந்து அவர்கள் கணிசமாகப் பிரித்தெடுக்கப்பட்டார்கள். அதற்காக நுண்ணிய வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பல கட்சிகள் அதற்காகப் பாடுபட்டன. அவர்களின் வாக்குகளைச் சுரண்டுவதற்காக அவர்களின் அரசியல் பலத்தை தமிழ்த்தேசிய அரசியலில் இருந்து பிரித்தெடுப்பதற்காக பெரும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அவ்வாறான முயற்சிகள் பல இடங்களில் ஓரளவுக்கு வெற்றி பெற்றும் உள்ளன.

அது போலத் தான் இப்போது மத ரீதியாக தமிழர்களைப் பிரித்தாளும் உத்திகள் தமிழ்த்தேசிய சக்திகளை பலவீனப்படுத்துவதுடன் சிங்கள அரசியல் சக்திகளையும் வடக்கில் பலப்படுத்தும். கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய சக்திகள் பலவாகப் பிரிந்து நின்றதால் தான் சிங்களப் பேரினவாதக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யாழ்ப்பாணத்தில் ஒரு தொகுதியை வென்றது. தமிழர்கள் இன ரீதியாக மத ரீதியாகசாதிய ரீதியாக எந்தளவுக்கு பிளவுபடுத்தப் படுகிறார்களோ அந்தளவுக்கு தமிழ்த்தேசியத்துக்கு விரோதமான கட்சிகளின் நலன்கள் உறுதிப்படுத்தப்படும்.

இங்கு கட்சிகளின் நலன்கள் என்பதற்கு அப்பால் தமிழர்களின் அடிப்படை உரிமைக்கான கோரிக்கைகளை பலவீனப்படுத்தும் சதி ஒன்ற உள்ளது.

அதற்காக உள்நாட்டு சக்திகள் மாத்திரமல்ல வெளிநாட்டு சக்திகளும் காரணமாக இருக்கின்றன. அவ்வாறான பிளவுகளுக்கு தூபம் போடுகின்றன.

கடந்த வாரம் இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் வெளியிட்ட அறிக்கையில் தமீத்தேசியக் கூட்டமைபிற்குள் கிறிஸ்தவர்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளதாக கூறியுள்ளார். இந்தளவுக்கு அவர் அரசியலைத் தொடங்கியது தமிழரசுக்கட்சியல் தான். அந்தக் கட்சியில் உயர் மட்டக்குழுக்களில் அவர் அங்கம் வகித்ரார். ஆனால் தமிழரசுக் கட்சிக்குத் தலைமை தாங்கியவர் தந்தை செல்வா ஒரு கிறிஸ்தவர்.

அவரது தலைமையை ஏற்று அன்று இன விடுதலைக்கான போராட்டத்தை நடத்தியவர் இன்று மத அரசியலுக்காக இன நலன்களைச் சிதைக்கின்ற நிலைக்கு கீழிறங்கி வந்துள்ளார். அவர் யாருடைய நலனுக்காக இவ்வாறான பிரச்சாரத்தை முன்னெடுக்கின்றார்? யாரு டைய அரசியல் வேலைத் திட்டத்தை மேற்கொள்கின்றார் என்ற சந்தேகமும் கேள்வியும் தமிழ் அரசியல் பரப்பில் நிறைந்திருக்கின்றது.

திருக்கேதீஸ்வர ஆலய முகப்பில் தேவாலயம் அமைக்கப்பட்டது. அந்தத் தேவாலயத்துக்கு அருகே அமைக்கப்பட்ட (20ம் பக்கம் பார்க்க)

LAW OFFICE
of
THELMA WILLIAMS

Barrister, Solicitor, Notary Public, Commissioner (ON)
LL.B (Sri Lanka)

❑ FAMILY LAW:
- Divorce
- Separation
- Property Division

❑ REAL ESTATE

❑ WILLS and ESTATES

❑ EMPLOYMENT LAW
- ODSP, CPP disability
- Wrongful Dismissal
- Long-term Disability

❑ ADMINISTRATIVE LAW

❑ POWERS OF ATTORNEY, AFFIDAVITS, STATUTORY DECLARATIONS

❑ விவாகரத்து, சட்டப்படி பிரிதல், சொத்துக்களை பிரித்தல் போன்ற குடும்ப வழக்குகள்,

❑ காணி, வீடு வாங்குதல், விற்றல் தொடர்பான சட்டங்கள்

❑ உயில் மற்றும் எஸ்ரேற்ஸ்

❑ தொழில்சார் சட்டம்

❑ நிர்வாக சட்டம்

❑ சட்ட ஆவணங்களை உருவாக்குதல்

கனேடிய சட்டத்துறையில் பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த
சட்ட வல்லுனர்களின் நம்பிக்கையும், உத்தரவாதமுமான சேவை

Quality, Dependable Service with many years of Canadian legal experience.

TEL:647-777-8424
Suite #300, 10 Milner Business Court,
Scarborough, Ontario M1B 3C6
(just 2 minutes north of HWY 401)

PLEASE CALL FOR AN APPOINTMENT

# எங்கள் நிலத்தை ஆக்கிரமிக்க வருவோருக்கு பூமாலை அணிவிப்பது இனத்திற்கு இழைக்கும் மாபெரும் துரோகம்

எங்களின் நிலத்தை ஆக்கிரமித்து அதனை பௌத்தமயமாக்க வந்தவர்களை எங்களின் ஒட்டுண்ணிகள் வரவேற்று பூ மாலை அணிவித்து இருக்கின்றார்கள். இது எமது இனத்திற்கு அவர்கள் செய்யும் துரோகம் ஆகும் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க தலைவி யோகராசா கனகரஞ்சினி தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் 21 மார்ச் 2022 திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

கொடூர யுத்தத்தை நடாத்தி எமது இனத்தினை அழித்தவர்களுக்கு எதிராக அனைத்து தமிழ் மக்களும் ஒன்றினையை வேண்டும். இந்த கால கட்டத்தில் அரசாங்கம் ஆட்டம் கண்டு கொண்டு உள்ளது. இந்நேரத்தில் நாம் ஒற்றுமையாக ஒன்றிணைந்து போராட்ட முன்வர வேண்டும்.

இந்த இன்னல்கள் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நாம் போராட்டத்தினை நடாத்தி இருந்தோம். அதன் போது , வயது முதிர்ந்த தாய்மார்களை ஈவிரக்கமின்றி குண்டாந்தடிகளால் அடித்தும் சப்பாத்து கால்கள் மிதித்தும் எங்களை அவமானப்படுத்தி அநாகரிகமாகவும் நடந்து கொண்டனர்.

எங்களின் நிலத்தை ஆக்கிரமித்து அதனை பௌத்தமயமாக்க வந்தவர்களை எங்களின் ஒட்டுண்ணிகள் வரவேற்று பூமாலை அணிவித்து இருக்கின்றார்கள். இது எமது இனத்திற்கு அவர்கள் செய்யும் துரோகம் ஆகும். எங்களின் உறவுகளுக்கு என்ன நடந்தது என சொல்ல முடியாதவர்கள் இன்று மக்களுக்கு அரிசி இல்லை,



பெற்றோல் இல்லை, டீசல் இல்லை என சொல்லுபவர்கள் வடக்கில் வந்து பொருளாதார நிலையத்தை திறக்கின்றார்கள். அவர்களிடம் கையளிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதனை அறியும் வரையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளான எங்களின் போராட்டம் தொடரும். எமக்கு பின்னால் நின்று எமக்காக குரல் கொடுக்க எமது தமிழ் மக்கள் ஒன்றிணைய வேண்டும்.

போராட்டத்தின் போது எமது முல்லைத்தீவு மாவட்ட சங்க தலைவி அடி காயங்களுக்கு உள்ளான நிலையில் முல்லைத்தீவு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அதேவேளை வவுனியா மாவட்ட தலைவியும் காயங்களுக்கு உள்ளான நிலையில் வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு இன்றைய தினம் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார்.

அவர் நடக்க முடியாத நிலையில் உள்ள போதும் அவருக்கு உடல் நிலை சரியாகி விட்டது என வைத்தியர்கள் அவரை வீட்டுக்கு அனுப்பி வைத்துள்ளனர். வைத்தியர்கள் கூட அரசாங்கத்திற்கு பரிவட்டம் பிடிக்க தொடங்கி விட்டார்களோ என சந்திக்கிக்கிறோம் என மேலும் தெரிவித்தார்.

# வாசல் வரை வந்தும் நல்லூரானை வழிபட முடியாமல் மாவைக் கந்தனிடம் ஓட்டம் பிடித்த மகிந்தா!

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்ட கடும் எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக, நல்லூர் கந்தசுவாமி கோவிலில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வழிபாடு நடத்த இருந்த நிகழ்வு இரத்துச் செய்யப்பட்டது.

இதனையடுத்து காலை 9.30 மணியளவில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்குச் சென்ற பிரதமர், அங்கு வழிபட்டில் ஈடுபட்டார். முன்னதாக, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் விஜயத்தை முன்னிட்டு நல்லூர் கோவில் சூழலில் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டதுடன், வீதிகளும் மூடப்பட்டிருந்தன. கோவிலுக்குச் செல்லும் பிரதான வீதிகளான பருத்தித்துறை வீதி, கோவில் வீதி என்பன பொலிஸாரால் மூடப்பட்டு,



மாற்றுப்பாதை ஊடாக பொதுமக்கள் அனுப்பப்பட்டனர். இந்நிலையில், நல்லூருக்கான பிரதமரின் விஜயம் இரத்து செய்யப்பட்டதை அடுத்து பாதுகாப்புத் தரப்பினர் அங்கிருந்து விலகிச் சென்றனர்.

கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# இலங்கையின் பொருளாதார நெருக்கடியால் தமிழ்நாட்டிற்குத் தப்பிச் செல்லும் தமிழர்கள்



இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சி மற்றும் கடும் விலை உயர்வு காரணமாக இலங்கை தமிழர்கள் தமிழகத்திற்கு அகதிகளாக வர தொடங்கியுள்ள நிலையில் ஒரே நாளில் 4 குடும்பத்தை சேர்ந்த 16 பேர் அகதிகளாக தனுஷ்கோடி வந்துள்ளனர். தமிழகத்திற்கு அகதிகளாக வந்தவர்கள் மீது மெரைன் போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

ரஇாமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் அடுத்த தனுஷ்கோடி பகுதி இலங்கைக்கு அருகே உள்ளதால் இலங்கை தமிழர்கள் இறுதிக் கட்ட போரின் போது அகதிகளாக தனுஷ்கோடி வழியாக தமிழகத்திற்குள் வந்து இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் தங்கியுள்ளனர்.

அதே போல் தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார வீழ்ச்சி காரணமாக உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றம் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் தட்டுப் பாட்டால் இலங்கை தமிழர்கள் இந்தியாவுக்கு அகதிகளாக வரக்கூடும். எனவே சர்வதேச கடல் எல்லை மற்றும் கடலோர பகுதிகளில் கண்காணிப்பை தீவிர படுத்த வேண்டும் என கடலோர பாதுகாப்பு குழு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப் பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த திங்கள்கிழமை இரவு மன்னார் மாவட்டம் பேசாலை கடற்கரையில் இருந்து மன்னாரை சேர்ந்த ஆறு பேர் ஒரு பைபர் படகில் புறப்பட்டு செவ்வாய்க்கிழமை அதிகாலை சுமார் 3.00 மணி அளவில் தனுஷ்கோடி அடுத்துள்ள நான்காம் மணல் திட்டு பகுதியில் வந்து இறங்கினர்.

மணல் திட்டில் அதிகாலை முதல் குடிநீர் மற்றும் உணவு இன்றி கைக் குழந்தையுடன் இலங்கை தமிழர்கள் தவித்து வருவதாக அப்பகுதியில் மீன் பிடித்து கொண்டிருந்த மீனவர்கள் மண்டபம் கடலோர காவல் படை அதிகாரிகளுக்கு தகவல் அளித்தனர். அதன் அடிப்படையில் மண்டபம் கடலோர காவல்படை முகாமிற்கு சொந்தமான ஹோவர் கிராப்ட் கப்பல் மூலம் மணல் திட்டில் இருந்த இலங்கை தமிழர்களை மீட்டு மண்டபம் கடலோர காவல்படை முகாமிற்கு அழைத்து வந்தனர்.

அதை தொடர்ந்து திங்கள் கிழமை காலை 9.00 மணியளவில் மன்னார் மாவட்ட கடற்கரையில் இருந்து தனது சொந்த பைபர் படகில் வவுனியாவை சேர்ந்த ஐந்து குழந்தைகள், மூன்று பெண்கள், இரண்டு ஆண்கள் என இரண்டு குடும்பத்தை சேர்ந்த 10 பேர் தனுஷ்கோடிக்கு புறப்பட்டுள்ளனர்.

### 37 மணி நேரமாக குழந்தைகளுடன் நடுக்கடலில் தத்தளித்த தமிழர்கள்

நடுக்கடலில் படகில் இன்ஜினில் ஏற்பட்ட பழுது காரணமாக கடும் வெயிலில் உணவு தண்ணீர் இன்றி சுமார் 37 மணி நேரத்திற்கும் மேலாக குழந்தைகளுடன் நடுக்கடலில் தத்தளித்த நிலையில் பல மணி நேர முயற்சிக்குப் பின் இஞ்சின் சரி செய்து செவ்வாய்க்கிழமை இரவு 8.00 மணியளவில் தனுஷ்கோடி வடக்கு பாலம் மீன்பிடி துறைமுகத்திற்கு வந்தடைந்தனர். பின்னர் அவர்களிடம் விசாரணை நடத்திய பாதுகாப்பு வட்டார அதிகாரிகள் விசாரணைக்குப் பின் 16 இலங்கை தமிழர்கள் மீதும் உரிய ஆவணங்கள் இன்றி சட்டவிரோதமாக தமிழகத்திற்குள் நுழைந்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டு ராமேஸ்வரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிமன்ற நீதிபதி இலங்கை தமிழர்களை புழல் சிறையில் அடைக்கவும் அவர்களுடன் வந்துள்ள சிறுவர்களை தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் உத்தர விட்டார்.

இதையடுத்து இலங்கை தமிழர்களை புழல் சிறையில் அடைக்க அழைத்து செல்ல தயாரான போது தமிழக அரசு மனிதாபிமான அடிப்படையில் இலங்கை தமிழர்கள் அனைவரையும் மண்டபம் ஈழ அகதிகள் மறு வாழ்வு முகாமில் தங்க வைக்க நடவடிக்கை எடுக்கமாறு சிறப்பு அரசாணை வழக்கியதால் இலங்கை தமிழர்களை புழல் சிறைக்கு அழைத்து செல்லாமல் அரசாணைக்காக இரவு வரை நீதிமன்ற வளாகத்தில் இலங்கை தமிழர்கள் காத்திருந்தனர். இரவு வரை அரசாணை நீதிமன்றத்திற்கு சென்னை தலைமை செயலகத்தில் இருந்து அனுப்படாததால் மீண்டும் இலங்கை தமிழர்களை மீண்டும் தனுஷ்கோடி மெரைன் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றனர். தமிழக த்திற்கு அகதிகளாக வந்த இலங்கை தமிழர்களை சிறையில் அடைப்பதா அல்லது மண்டபம் ஈழ அகதிகள் முகாமில் ஒப்படைப்பதா என தெரியாமல் மெரைன் போலீசார் குழப்பத்தில் உள்ளனர்.

### இலங்கையில் சாமானிய மக்கள் வாழ முடியாது

இலங்கை தமிழர்கள் தமிழகம் வருவதற்கான காரணம் குறித்து தனுஷ்கோடி வந்துள்ள மன்னாரை சேர்ந்த கியூரி பிபிசி தமிழிடம் பேசுகையில "இலங்கையில் தற்போது நிலவி வரும் கடுமையான விலைவாசி உயர்வு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக தனுஷ்கோடி வர முயற்சி செய்து திங்கள்கிழமை இரவு அங்கிருந்து கிளம்பினோம். மன்னார் மாவட்டத்திலிருந்து பைபர் படகில் எங்களை அழைத்து வந்து இங்கு விட்டவர்களின் முழுமையான தகவல் எதுவும் எங்களுக்கு தெரியாது. ஆனால் தமிழகம் அழைத்து வர தலா நபர் ஒருவருக்கு 10 ஆயிரம் என ஆறு நபர்களுக்கு 60 ஆயிரம் கொடுத்தோம்."

எங்களுக்காக திங்கட்கிழமை நள்ளிரவு ஒரு பைப்பர் படகு பேசாலை கடற்கரையில் காத்திருந்தது. அந்த படகில் முகத்தை மூடி இருந்த நபர் ஒருவர் கையசைத்தார் நாங்கள் படகில் ஏறி செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.00 மணி அளவில் தனுஷ்கோடி நான்காம் மணல் திட்டில் வந்து இறங்கினோம்.

இறுதிக் கட்ட போரின் போது உயிரை காப்பாற்றி கொள்ள தமிழகத்திற்கு 2001ஆம் ஆண்டு அகதியாக வந்து குடியாத்தம் அகதிகள் முகாமில் தங்கி இருந்தேன். முகாமில் தங்கியிருந்த

(18ம் பக்கம் பார்க்க)

## பிழைத்தால் இந்தியாவில் வாழ்வோம்! இல்லையேல் கடலோடு சாவோம்!



ONLINE INSTRUCTIONS
Mr. Jonathan Ponnudurai Bsc(Hon.)
Grade: 11&12
Physics
Calculus
Advanced Functions
University Level -1
Physics
Calculus
Algebra


647-395 6987
Jonathanp1@live.ca

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

9 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

19 மார்ச் 2022 முதல் 25 மார்ச் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு:-

ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## நினைவழியா நினைவஞ்சலிகள்



### திருமதி செல்வநாயகி சோமசுந்தரம்

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி சோமசுந்தரம் செல்வ நாயகி திரு செல்லையா சோமசுந்தரம் ஆகியோரது நினைவு நாளை யொட்டி கனடாவில் வசிக்கும் அன்னாரது குடும்பத்தினர் 24 மார்ச் 2022 வியாழக் கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி திரு செல்லையா சோமசுந்தரம் இணையரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பேரம்பலம் உதயகுமார்

யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பேரம்பலம் உதயகுமார் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 20 மார்ச் 2022 ஞாயிற்றுக் கிழமை யாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பேரம்பலம் உதயகுமார் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 62வது பிறந்தநாள் நினைவாக



### திருமதி சரோஜினிதேவி ஞானசேகர்

சுருவிலைப் பிறப்பிடமாகவும் கனடா ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களது 62வது பிறந்த நாள் நினைவு 23 மார்ச் 2022 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அவரது பிறந்தநாள் நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 36வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு குகதாஸ் பொன்னம்பலம்
### திரு வைத்தீஸ்வரன் பொன்னம்பலம்

யாழ்.இடைக்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களான திரு குகதாஸ் பொன் னம்பலம் திரு வைத்தீஸ்வரன் பொன்னம்பலம் சகோதரர்களுடைய 36வது ஆண்டு நினைவு நாள் 20 மார்ச் 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு குகதாஸ், திரு வைத்தீஸ்வரன் ஆகியோரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பொன்னம்மா ஐயாத்துரை

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பொன்னம்மா ஐயாத்துரை அவர்களின் நான்காவது ஆண்டு நினைவு நாள் 28 மார்ச் 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். திருமதி பொன்னம்மா ஐயாத்துரை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி பங்கயம் வைத்தியலிங்கம்

அனலைதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வி பங்கயம் வைத்தியலிங்கம் அவர்களின் நான்காவது ஆண்டு நினைவு நாள் 23 மார்ச் 2022 புதன் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வி பங்கயம் வைத்தியலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



18 மார்ச் 2022 வெள்ளிக்கிழமை உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்து கிளிநொச்சியில் சிவபதமடைந்த திரு சிவகரன் குமாரசாமி (ரங்கன்) அவர்களது 4ம் மாத நினைவாக அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குநைந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



19 மார்ச் 2022 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சர்வானந்தன் பவளராணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் வினோதன் அவர்களின் 28வது பிறந்த நன்நாள் ஆகும். அன்றையதினம் செல்வன் வினோதன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



19 மார்ச் 2022 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி தனுஷன் லவசுதா தம்பதிகளின் செல்வப்புதல்வன் தனிஷ் தனுஷனின் 7வது பிறந்த நன்நாள் ஆகும். அன்றையதினம் செல்வன் தனிஷ் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




16 மார்ச் 2022 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் அருண் சூர்யாவின் 6வது பிறந்த நன்நாள் ஆகும். அன்றைய நாளுக்காக செல்வன் அருண் சூர்யா 19 மார்ச் 2022 சனிக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



20 மார்ச் 2022 ஞாயிற்றுக்கிழமை யாழ்.இடைக்காட்டைச் சேர்ந்தவர்களான திரு குகதாஸ் பொன்னம்பலம், திரு வைத்தீஸ்வரன் பொன்னம்பலம் சகோதரர்களது 36வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



20 மார்ச் 2022 ஞாயிற்றுக்கிழமை யாழ்.கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிரிந்த திரு பேரம்பலம் உதயகுமார் அவர்களது 2வது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



23 மார்ச் 2022 புதன்கிழமை சுருவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரத்துவமாது திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களது 62வது பிறந்த நாள் ஆகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது பிறந்தநாள் நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



23 மார்ச் 2022 புதன்கிழமை அனலைதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த செல்வி பங்கயம் வைத்தியலிங்கம் அவர்களது 4வது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



23 மார்ச் 2022 புமன்கிழமை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு ஜெயச்சந்திரன் சிவலிங்கம் அவர்களது பிறந்த நாள் ஆகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது பிறந்த நாள் நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

## 7வது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் தனிஷ் தர்ஷன்

கனடாவில் வசிக்கும் திரு திருமதி தர்ஷன் லவசுதா தம்பதிகளின் செல்வப்புதல்வன் தனிஷ் தர்ஷனின் 7வது பிறந்த நன்நாள் 19 மார்ச் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் தனது இல்லத்தில் எளிமையாகப் பிறந்த நன்நாளை கொண்டாடிய செல்வன் தனிஷ் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்றைய தினம் அன்பு இல்ல க்குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். அகவை ஏழ காணும் தனிஷ் பல்கலையும் கற்றுப் பார் போற்றும் பைந்தமிழ் மகனாக வளர வாழ்த்தும் அவரது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!



23 மார்ச் 2022 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கஜன் கௌசிகா இணையர்களது மூன்றாவது ஆண்டு திருமண நன்நாளாகும். அன்றைய நாள் இணையர்கள் இருவரும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



24 மார்ச் 2022 வியாழக்கிழமை தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி செல்வநாயகி சோமசுந்தரம் அவர்களது நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது துணைவர் திரு செல்லையா சோமசுந்தரம் அவர்களது நினைவையும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



25 மார்ச் 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சந்திரிகா ரஞ்சன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி சந்திரிகா ரஞ்சன் அவர்கள் தனது குடும்பத்தினருடண் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



16 மார்ச் 2022 புதன்கிழமை அனலைதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சற்குணம் சாம்பசிவம் அவர்களது 15வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக்குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
**10 Milner Business Court, Suite 709, (Markham & Milner), Scarborough ON M1B 3C6**
Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • **info@sasilaw.ca** • **www.sasilaw.ca**

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# உங்கள் சகல மோட்கேஜ் தேவைகளுக்கும் அழையுங்கள்...



* 1st time Home Buyers
* 2nd and 3rd Mortgages
* Refinancing
* Home Equity Line of Credit
* Good Credit/Bad Credit

**NO PROBLEM**

GTM GREATER TORONTO MORTGAGES

**Janaki Jeyathevan**
*(Mortgage Specialist - Lic. No.: M19002242)*

Dir: **647-624-3415**
Email: mortgageapprovalstoday@gmail.com

TAX CENTRIC

**2338 Hurontario St., Unit 100A, Mississauga, ON L5B 1N1**

உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Servicing clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph



- **Personal Tax**
- **Corporate Tax**
- **Book Keeping & Accounting**
- **Payroll Services**
- **GST/HST Filing**
- **Corporate Services**
- **Business Startup**
- **Financial Planning**

## Gayatiri Thavan

Tel: **289.569.0169** • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
**www.taxcentric.ca**



Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Insurance Advisor
Life and Living Benefits

RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
Scarborough, ON M1V 1V2
Mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

**Insurance can seems confusing**
**It doesn't have to be.**

*We'll help you get it.*

**Talk to an RBC Insurance advisor in your neighbourhood today**

*We take the time to make choosing the right insurance plan less confusing for you. Whether it's life, health, car, home, travel or wealth, we'll help you to choose the right coverage to protect what's important to you.*

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால் பெரும்பாலும் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance®
® Life | Health | Auto | Home | Travel | Wealth

அல்பியன் பதியில் கோயில்கொண்டருளியிருக்கும்

# அருள்மிகு கனடா ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்

## மகோற்சவ விஞ்ஞாபனம் 2022







மாரிதேவி தியானம்
அருணமணி நிபாங்கம் அக்னிகேசம் கரண்டம்
டமருக கர பாசம் கட்க ஹஸ்தம் கபாலம்
அநல நயண யுக்மம் ஹரகேயூர பூஷ்யம்
அகில புவன மாதா மாரிகாதேவி ஸ்வரூபம்

**அம்பிகை அடியார்களே!**

நிகழும் மங்களகரமான பிலவ வருஷம் பங்குனித்திங்கள் 20ம் நாள் (02.04.2022) சனிக்கிகிழமை முற்பகல் 10 மணிக்கு அச்சுவினி நட்சத்திரமும் துதியை திதியும் கூடிய சுபவேளையில் ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்) ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் மகோற்சவம் நடைபெறும். அடியவர்கள் உற்சவ காலங்களில் ஆலயம் வந்து அம்பிகையை தரிசித்தல் உத்தமோத்தம புண்ணியமாகும்.

| | |
|---|---|
| 01-04-2022 வெள்ளி | வருடாந்த மகோற்சவ கிரியைகள் ஆரம்பம். விக்னேஸ்வர, மூலமூர்த்தி, உற்சவமூர்த்தி, அஸ்திரதேவி, சிம்ம, அனுக்ஞைகள், கிராம சாந்தி, வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரகணம் |
| 02-04-2022 சனி | காலை விசேட புண்ணியாக வாசனம், ரக்ஷாபந்தனம், பேரிதாடனம், வசந்தமண்டபப்பூசை, அஸ்திரதேவியோடு துவஜபட வீதி பிரதக்ஷணம், மூல சிம்ம பூசை, தம்ப பிரதிஸ்டை, துவஜபட அபிசேகம், சமஸ்தா தேவி ஆவாகனம், யாத்ரா தானம், துவஜாரோகணம் (கொடியேற்றம்), கணபதி தாளம், சிம்ம தாளம், அஸ்திரதேவி ஆவாகனம், பலிபீட பிரதிஸ்டை, மகாசீர்வாதம், வீதி பிரதக்ஷணம், நவசந்தியாவாகனம், இரவு: யாகாரம்பம் |
| 16-04-2022 சனி | காலை: யாகாங்குர விஜர்ஜனம், சூர்ணோற்சவம், விசேட தீர்த்த தொட்டியில் அஸ்திரதேவி ரக்ஷாபந்தன விஜர்ஜனம், தீர்த்த ஸ்நானம் முடித்து மகாபூர்ணாகுதி, யாக கும்பாபிஷேகம், இரவு: துவஜவரோகணம் (கொடியிறக்கம்), நவசந்தி விஜர்ஜனம், மௌனோற்சவம், மௌனோற்சவம், ரக்ஷாபந்தன விஜர்ஜனம், சண்டேஸ்வரி உற்சவம், ஆசாரிய உற்சவம், குரு வழிபாடு. |

| நாள் | உற்சவம் | பகல் உபயகாரர் | இரவு உபயகாரர் |
|---|---|---|---|
| 02-04-2022 (சனி) | 1ம் திருவிழா | கொடியேற்றம் காலை 10:00 மணி, ராஜ்குமார் குடும்பம், உதயகுமார் குடும்பம், ஹரீந்திரன் குடும்பம், பாலகிருஷ்ணன் குடும்பம் | சிவமயம் குடும்பம், சுகுணரூபன் குடும்பம் மாணிக்கம் சௌந்திரமேனன் குடும்பம் |
| 03-04-2022 (ஞாயிறு) | 2ம் திருவிழா | பிறேம்குமார் இளங்கோ குடும்பம் | ஐயான்துரை குடும்பம் |
| 04-04-2022 (திங்கள்) | 3ம் திருவிழா | சந்திரலிங்கம், தமிழ்செல்வி குடும்பம் | விஜயகுமாரன் சுவர்ணா குடும்பம் |
| 05-04-2022 (செவ்வாய்) | 4ம் திருவிழா | ஆனந்தகுமார் ஆனந்தவேல் குடும்பம், பிரணவன் பாலகுமார் குடும்பம், கண்ணன் வெங்கடாசலம் குடும்பம் | அருள் சந்திரன் குடும்பம் |
| 06-04-2022 (புதன்) | 5ம் திருவிழா | ஈஸ்வரபாதம் சின்னமாமயில் குடும்பம் | குணசேகரம் குடும்பம், தனசேகரம் குடும்பம், ஜெயசேகரம் குடும்பம், |
| 07-04-2022 (வியாழன்) | 6ம் திருவிழா | மோகனதாஸ் சுதன் சாந்தி குடும்பம் | நாராயணசாமி பவாமலர் குடும்பம் (பாண்டிக்கம்பனி) |
| 08-04-2022 (வெள்ளி) | 7ம் திருவிழா | விசாகரட்ணம் ராஜசேகரம், லீலாவதி, தமயந்தன், சிந்துஜா குடும்பம், தமோதரம்பிள்ளை, முரளீதரன், பகீரதன் குடும்பம் | சிவநேசன் தங்கேஸ்வரி குடும்பம் |
| 09-04-2022 (சனி) | 8ம் திருவிழா | சகாதேவன்(அண்ணாச்சி), சந்திரவதனா குடும்பம் | (வேட்டைத்திருவிழா) மோகனதாஸ் தங்கராணி குடும்பம், சேகர் சுஜாதா குடும்பம், சுது கிரேக் குடும்பம் |
| 10-04-2022 (ஞாயிறு) | 9ம் திருவிழா | தேவசிகாமணி தங்கமலர் குடும்பம் ( தேவக்கிளி குடும்பம் ) | திசோக் குடும்பம், ஜீவன் குடும்பம், நந்தன் குடும்பம், ஜனா குடும்பம், ஜெயம் குடும்பம் |
| 11-04-2022 (திங்கள்) | 10ம் திருவிழா | முரளி கௌரி குடும்பம், ஜலந்திரன் பவானி குடும்பம் | பாலகுருசாமி பாலச்சந்திரன் குடும்பம் |
| 12-04-2022 (செவ்வாய்) | 11ம் திருவிழா | (பூங்காவனம்) இளைஞர்கள் | (பூங்காவனம் இரவு)இளைஞர்கள் |
| 13-04-2022 (புதன்) | 12ம் திருவிழா | இரா தனபாலன் குடும்பம் | புலிவேட்டை சுரேஷ் குடும்பம், நிஷாந்தன் குடும்பம் |
| 14-04-2022 (வியாழன்) | 13ம் திருவிழா | கண்ணன் சங்கீதா குடும்பம் | சப்பறம் சி. இளையபெருமாள் குடும்பம் |
| 15-04-2022 (வெள்ளி) | 14ம் திருவிழா | தேர் வ.இ.ந. சந்திரலிங்கம் சீலாவதி குடும்பம் | கந்தசாமி அண்ணாமலை குடும்பம் |
| 16-04-2022 (சனி) | 15ம் திருவிழா | தீர்த்தம் வாசுகி ஜீவதாஸ் குடும்பம் | கொடியிறக்கம் சுகந்தன் கவிதா குடும்பம் |
| 22-04-2022 (வெள்ளி) | குளிர்த்தி | குளிர்த்தி அபிசேகம் பொன். சிவகுமார் சந்தானலக்ஸ்மி குடும்பம் | கற்பூரத் திருவிழா அசோக்குமார் கலாஜினி குடும்பம் |
| 24-04-2022 (ஞாயிறு) | இரவு | வைரவர் மடை – பிரணவி மயில்வாகனம் குடும்பம் | |

| | | |
|---|---|---|
| அபிசேகம் | பகல் 9:00 மணி | இரவு 6:00 மணி |
| மூலஸ்தான பூசை | பகல் 9:30 மணி | இரவு 6:30 மணி |
| வசந்த மண்டப பூசை | பகல் 11:00 மணி | இரவு 8:00 மணி |

ஆலய பிரதம குரு: ஆகம கிரியா விபுதர் சிவஸ்ரீ ஆறுமுகக்குருக்கள்

மங்கள வாத்தியம்: சிவா நாதஸ்வர மியுசிக் அக்கடமி, சிவமயம் குழுவினர்

1771 ALbion Road. Unit #1, Toronto, Ontario, M9W 5S7, Canada. 416.213.0110

**16-04-2022 சனிக்கிழமை சித்ரா பௌர்ணமி அன்று காலை 6 மணி முதல் பிதிர் தர்ப்பணம் செய்யப்படும்**

www.shrimuththumaari.com Canada-Shri-Muththumaari-Amman

இவ்வண்ணம்: ஆலய தர்மகர்த்தா சபையினர்

# இலங்கைப் பொருளாதார நெருக்கடி 50 ஆண்டு தவறின் விளைவு!

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி சமையல் எரிவாயுவில் தொடங்கி மின்வெட்டு வரை வந்திருக்கிறது. எரிபொருட்களை நிரப்புவதற்கு நீண்ட நேரம் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது. அத்தியாவசியப் பொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்களின் விலையும் கட்டுப்பாடற்று விற்கப்படுகின்றன. பொதுவாகவே கட்டுப்பாடற்ற சந்தை அல்லது கட்டுப்பாடற்ற நிலை உருவாகி விட்டது. அடுத்து என்ன நடக்கும் என்று யாருக்கும் தெரியாது.

இதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது ஐம்பது ஆண்டு காலத் தவறுக்குத் தான் இப்பொழுது கூட்டுத் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். ஆனாலும் இதை விளங்கிக் கொள்ள யாருமே தயாரில்லை. இது ஏதோ இப்போது தான் ஏற்பட்ட பிரச்சினை என்றும் புதியதொரு நெருக்கடி என்றும் எண்ணுகிறார்கள். கடந்த ஐம்பது ஆண்டுகளாக எல்லோரும் விட்ட தவறுகளின் வெளிப்பாடு தான் இது என்று சொல்லிக் கவலைப்பட்டார் தோழர் ஒருவர்.

அது என்ன "ஐம்பது ஆண்டுத் தவறு?" என்று நீங்கள் கேட்கலாம். நானும் அப்படித் தான் கேட்டேன்.

1970களுக்குப் பிந்திய காலப்பகுதியையே தோழர் குறிப்பிட்டார்.

1970 இன் முற்பகுதியில் ஜே.வி.பியின் கிளர்ச்சி தொடங்கியது. அதிலே இளைய தலைமுறையினர் ஆயிரக்கணக்கில் போராட்டக்களத்திலே குதித்தனர். அவர்களை அடக்குவதற்கென்று அரச படை எந்திரம் பெருப்பிக்கப்பட்டது. முப்படைகளுக்குமான ஆட்சேர்ப்புத் தொடக்கம் நிதி ஒதுக்கீடு வரை தேச வளம் பெருவாரியாக செலவழிக்கப்பட்டது. அதில் தொடங்கிய சீரழிவு இது" என்றார் தோழர்.

உண்மை தான். 1970களின் தொடக்கத்திலிருந்து கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேல் நாடு அரசியல் கொந்தளிப்புகளால் அலைக்கழிக்கப்பட்டது. அழிந்தது. அரசியல் பொருளில் விளக்குவதானால் உள்நாட்டு நெருக்கடியால் சீரழிந்தது. அதற்கு முன் நானூறு ஆண்டுகளுக்கு மேலாக அந்நியரால் சுரண்டப்பட்ட நாடு இது.

சுதந்திரம் பெற்ற 20 ஆண்டுகளுக்குள்ளேயே தொடங்கிய அரசியற் கொந்தளிப்பும் நெருக்கடியும் 50 ஆண்டுகளுக்கும் மேலும் நீடித்தது என்றால்…

விளைவு எப்பிடியிருக்கும்? ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு மூன்று வளங்கள் அடிப்படையானவை.

ஒன்று அதனுடைய இயற்கை வளங்கள்.

இரண்டாவது மனித வளம். அதிலும் குறிப்பாக இளைய தலைமுறையின் ஆற்றல். அவர்களே சிந்தனைத் திறனிலும் ஆற்றச் சிறப்பிலும் உழைக்கும் சக்தியாக முன்னிற்போர்.

மூன்றாவது நிதி மற்றும் அதன் சொத்து. ஆனால் நாட்டில் தொடர்ச்சியாக நடந்த அரசியல் நெருக்கடிகளாலும் போராட்டங்களாலும் போராலும் பெருமளவு இளைய தலைமுறையின் ஆற்றல் 50 ஆண்டுகளாக நாட்டின் வளர்ச்சிக்குக் கிடைக்கவே இல்லை. அவ்வளவும் சிதைக்கப்பட்டன. அல்லது வீணாயின.

பாருங்கள்1 1970களில் லட்சம் வரையான சிங்கள இளைஞர்கள் ஜே.வி.பியில் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களை அடக்குவதற்காக அரசும் படைகளுக்கு ஆட்களைத் திரட்டியது. நிதியையும் செலவழித்தது. இறுதியில் பல்லாயிரக் கணக்கானோரின் (அவ்வளவும் இளைய தலைமுறையினர்) உயிர்ப்பலியோடு அந்தப் போராட்டம் நசுக்கப்பட்டது.

ஜே.வி.பியை ஒடுக்கியதாக அரசு கருதினாலும் நாட்டிற்கு அது பல வகையான இழப்பையே கொடுத்தது. அது அன்றைய இலங்கைக்குப் பெரிய சுமையே. பெரிய நெருக்கடியே. பெரிய இழப்பே.



பிறகு தமிழ் இளைஞர்களின் போராட்டம் எழுச்சியடைந்த போது அதிலும் பல லட்சக் கணக்கானோரின் ஆற்றலும் திறனும் நாட்டின் தேசிய உற்பத்திக்கோ வளர்ச்சிக்கோ கிட்டாமற் போனது. மறுவளத்தில் அந்தப் போராட்டத்தை ஒடுக்குவதற்காக அரசும் படைகளைப் பெருக்கியது. இதனாலும் பெரியதொரு இளைய தரப்பின் ஆற்றல் தேசிய உற்பத்திக்குக் கிடைக்காமல் போனது.

இந்தப் போராட்டம் 40 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்தது. இந்த நாற்பது ஆண்டுகளிலும் 30 லட்சத்துக்கும் அதிகமானோரின் ஆற்றல் வீணடிக்கப்பட்டது. சொத்துகள், உடமைகள், இயற்கை வளங்கள் எல்லாம் அழிக்கப்பட்டன. லட்சக்கணக்கானோர் பலியாகினர். பெருமளவு நிதி பாதுகாப்புக்கென ஒதுக்கப்பட்டது. ஒவ்வொரு வரவு செலவுத்திட்டத்திலும் பாதுகாப்புத் துறைக்கென ஒதுக்கப்பட்ட நிதியை கணக்கிட்டுப் பார்த்துக் கொள்ளலாம்.

பல்லாயிரக்கணக்கானோர் நாட்டை விட்டே பெயர்ந்தனர். இதெல்லாம் நாட்டுக்கு ஏற்பட்ட பேரிழப்பன்றி வேறென்ன?

அரசைக் காப்பாற்றுவதற்காக அதாவது நாட்டைக் காப்பாற்றுவதற்காக தேசிய பாதுகாப்புக்கென இப்படித் தானே எந்த அரசும் செயற்படும். இது தவிர்க்க முடியாததல்லவா? எனச் சிலர் கேள்வி எழுப்பலாம்.

தேசிய பாதுகாப்பு அவசியம்தான். அந்தத் தேசிய பாதுகாப்பு எந்த அடிப்படையிலானது என்ற புரிதல் அவசியம். அதுவும் இலங்கை போன்ற வறிய — சிறிய நாட்டுக்கு?

உலகில் வளம் கொழிக்கும் நாடுகளில் ஒன்றாக விளங்கும் சுவிற்சர்லாந்து தேசிய பாதுகாப்புக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கிறது, எவ்வளவு நிதியை ஒதுக்குகிறது? இதைப் போல பெரும் நிலப்பரப்பைக் கொண்ட அவுஸ்திரேலியா தன்னுடைய தேசிய பாதுகாப்புக்கு என எவ்வளவு நிதியையும் வளத்தையும் ஒதுக்குகிறது என்று அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு நாட்டுக்கு தேசிய பாதுகாப்பு இரண்டு வகையில் ஏற்படுவதுண்டு. ஒன்று வெளித் தரப்பினால். மற்றது உள்நாட்டில் உண்டாகும் முரண்களால். வெற்றிகரமான ராஜதந்திர அணுகுமுறைகளால் வெளித்தரப்பின் மூலம் உண்டாகும் அபாயங்களைத் தவிர்ப்பதே சிறந்த வழி. அதையே இன்றைய உலகு செய்து வருகிறது.

உள்நாட்டு நெருக்கடி என்பது மொழி, மத, நிற, இன, பிரதேச ரீதியாக உண்டாகும் முரண்களால் உருவாகுவது. அதாவது உள்நாட்டு நெருக்கடியென்பது உள்ளிருந்து கொல்லும் நோயாகும். அதற்கு உரிய மருந்தைக் கண்டு நோயைக் குணப்படுத்தவில்லை என்றால் அது நாட்டையே அழித்துவிடும்.

உரிய மருந்தென்பது அதிகாரத்தைப் பயன்படுத்தி அடக்குவதல்ல. பதிலாக ஜனநாயகம், பன்மைத்துவம், பல்லினத்தன்மை, சமத்துவம் போன்றவற்று இடமளிப்பதன் மூலம் சீர்செய்வது.

இதைச் செய்யத் தவறியதன் விளைவே இன்றைய நெருக்கடி நிலை. இப்பொழுது கூட யாரும் உள்நாட்டு நெருக்கடிக்கு உரிய மருந்தென்பது ஜனநாயகம், பன்மைத்துவம், பல்லினத்தன்மை, சமத்துவம் போன்றவற்று இடமளிப்பதன் மூலம் சீர்செய்வதே யாகும் என்று ஏற்கத் தயாரில்லை.

பதிலாக படைகளையும் அதிகாரத்தையுமே நம்புகிறார்கள். இது ஒரு வகையான உளநோயாகும். இத்தகைய உளநோய்க்கு அறிவியலில் மருத்துவம் கிடையாது. ஏனென்றால் மரபுத் தொடர்ச்சி போல இலங்கையில் கடந்த ஐம்பது ஆண்டாக ஆட்சியிலிருந்த அத்தனை அரசுகளும் இந்த வழிமுறையைத்தான் பின் பற்றின. இந்த வழி முறையின் மூலமே உள் நாட்டு நெருக்கடி கட்டுப்படுத்தப்பட்டு வந்தது. கவனிக்கவும், கட்டுப்படுத்தப்பட்டு வந்ததே தவிர தீர்க்கப்படவில்லை.

அப்படித் தீர்க்கப்பட்டிருந்தால் இன்று இந்தப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கவும் மாட்டாது. தவிர, இன்னும் தொடர்கின்ற இனப்பிரச்சினை அது தொடர்பான அரசியல் நெருக்கடிகள், மனித உரிமை விவகாரங்கள், வெளியுலக அழுத்தங்கள் போன்றவை எவையும் இருந்திராது.

இதை இன்னொரு கோணத்திலும் பார்க்கலாம். இன்று நாடு முழுவதிலும் வளர்ந்து பெருகியிருப்பவை கோவில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள், விகாரைகள் என்ற மதவழிபாட்டிடங்கள். ஆனால் அந்தளவுக்கு மக்களிடம் ஆன்மீகமும் அது உண்டாக்கும் மானுட நேயமும் மனிதப் பண்பும் பெருகியிருக்கிறதா? குறைந்த பட்சம் அயலவருடன் அடுத்த சமூகத்தினருடன் நேசமாக இருக்கக் கூடிய அளவுக்கு உளப்பண்பாடு உருவாகியுள்ளதா? அது நிகழவில்லை என்றால் அதனால் பயனென்ன? வடக்குக் கிழக்கில் போருக்குப் பின்னர் பெரிகிக் கிடப்பவை கோவில்களும் படை முகாம்களும் தான்.

இவை இரண்டும் தேசிய உற்பத்திக்கு எந்தப் பயனையும் விளைவிப்பனவல்ல. வேண்டுமானால் நீங்கள் எந்தத் தேசிய நெடுஞ்சாலையிலாவது செல்லும்போது ஒரு தடவை கணக்கிட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள். எத்தனை மதச் சின்னங்கள் பெருகிக் கிடக்கின்றன. எத்தனை படைமுகாம்கள் பெருகியுள்ளன என்று. அந்தளவுக்கு உற்பத்தி ஆலைகளும் தொழில் மையங்களும் உள்ளனவா எனவும் கணக்கிட்டுப் பாருங்கள். அப்பொழுது தான் யதார்த்தம் என்ன என்று விளங்கும்.


கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– கருணாகரன் –

தேசிய உற்பத்தியைக் கவனம் கொள்வதற்குப் பதிலாக தேசிய வளத்தைச் சிதைக்கும் நிலையில் நாட்டை வைத்திருந்தால் நெருக்கடிகள் வரவரக் கூடுமே தவிரக் குறையாது.

இதைப் புரிந்து கொள்ள மறுக்கும் அரசியற் தரப்பினரை நாமே தொடர்ந்தும் ஆட்சியில் அமர்த்தி வந்திருக்கிறோம். ஆகவே நாமே நம்முடைய நெருக்கடிகளுக்குக் காரணமாக இருக்கிறோம்.

இன்றும் இனரீதியாக பிளவு பட்டுத் தான் கிடக்கிறோம். ஒருவருவடைய முகத்தை ஒருவர் சிநேகமாகப் பார்க்க முடியாமலும் ஒருவருடைய உளத்தை ஒருவர் உளமார நேசிக்க முடியாமலும் தான் இருக்கிறோம்.

பதிலாக ஒவ்வொருவரும் மறுதரப்பை குற்றம் சுமத்திக் கொண்டேயிருக்கிறோம். ஆனால் எல்லோருக்கும் மின்வெட்டு ஒரே விதமாகவே நிகழ்கிறது. ஒரே விதமாகவே பொருட்களின் விலை ஏறுகிறது. ஒரே விதமாகவே பொருளாதார நெருக்கடி ஏற்படுகிறது.

முன்பு போர்க் காலத்தில் உயிர்ப்பலி நிகழ்ந்ததும் அப்படித் தான். மரணம் அத்தனை சமூகத்தினரிடத்திலும் நாடிய மாதியது. நாடோ வீடோ முதலில் அமைதியைக் காண வேண்டும். அடுத்துப் பொருளாதார முன்னேற்றத்தை உருவாக்க வேண்டும். அதற்கான வழிகளைத் தேட வேண்டும்.

இதற்குத் தீர்க்க தரிசனமும் திராணியும் திடசித்தமும் மனவிரிவும் உள்ள தலைவர்கள் வேண்டும். அவர்களால் தான் நிரந்தரத் தீர்வைக் காண முடியும். மற்றவர்கள் காய்ச்சலுக்குப் பனடோல் பாவிப்பதைப்போலத் தற்காலிகத் தீர்வையே தருவார்கள். அது நோயை பிரச்சினையை முற்றாகக் குணமாக்காது.

நமக்குத் தேவை அனைத்துச் சமூகத்தினரையும் தன் ஆளுமையாலும் அன்பினாலும் ஆகர்ஷிக்கக் கூடிய ஒரு தலைமையே. அந்தத் தலைமையின் மூலமே அத்தனை நெருக்கடிகளுக்குமான தீர்வு கிட்டும். அத்தகைய தலைமையை உருவாக்குவது வேறு யாருமல்ல. நாமேதான்.

அதற்கு நாம் முதலில் தயாராக வேண்டும். இனம், மதம், மொழி, பிரதேசம் என்ற எல்லைகளைக் கடந்த சிந்தனையும் மனமும் நமக்கு வேண்டும். அது ஒன்றே நம்முடைய நெருக்கடிகளிலிருந்து நம்மை விடுவிக்கும். அது நிகழவில்லை என்றால் இன்னும் இன்னும் இந்த நெருக்கடி கூடுமே தவிரக் குறையாது. இது வரலாற்று உண்மையாகும்.

சிலர் சொல்லக் கூடும் ஆட்சி மாறினால் எல்லாமே சரியாகி விடும் என்று. எதிர்க்கட்சிகள் அப்படித்தான் சொல்லிக் கொள்கின்றன. அவர்களும் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். முன்னர் ஆட்சி நடத்தியவர்கள் தாங்கள் என்பதை ஏனென்றால் இது 50 ஆண்டுகாலத் தவறு.

# பா.ஜ.க.வின் வளர்ச்சிக்கு காரணம் காங்கிரஸா?

அண்மையில் நிறைவடைந்த உத்திர பிரதேசம்பஞ்சாப் உத்திரகாண்ட் கோவா மணிப்பூர் ஆகிய வடக்கு மற்றும் வட கிழக்கு மாநிலங்களில் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் பஞ்சாப் மாநிலத்தை தவிர்த்து ஏனைய நான்கு மாநிலங்களிலும் பாரதிய ஜனதா கட்சி பெரும் வெற்றியை பெற்றிருக்கிறது.

குறிப்பாக அக்கட்சி உத்தரபிரதேச மாநிலத்தில் பெற்றிருக்கும் வெற்றி யானது இந்தியளவில் அக்கட்சியின் மதிப்பை உயர்த்தி இருக்கிறது.

மக்கள் பாரதிய ஜனதா கட்சி மீது நம்பிக்கை வைத்திருப்பதை பிரதிபலிப் பதாகவும் கொள்ள வேண்டியுள்ளது அத்துடன் காங்கிரஸ் கட்சி மீதான அவ நம்பிக்கையை வெளிப்படுத்தியு முள்ளது.

காங்கிரஸ் கட்சியிலிருந்து அரசியல் பாடத்தை கற்றுக் கொண்ட தலைவர் கள் தான் தற்போது பா.ஜ.க.வில் அதிக மாக இருக்கிறார்கள்.

2014ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை காங்கிரஸ் கட்சியிலிருந்து தெரி வான மக்கள் பிரதிநிதிகள் 170க்கும் மேற்பட்டவர்கள் பா.ஜ.க.வில் இணைந் திருக்கிறார்கள்.

அதனால் பா.ஜ.க.வின் வளர்ச்சிக்கு காங்கிரஸ் தான் காரணம் என்று அரசி யல் நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள்.

பிறிதொரு பிரிவினரோ பா.ஜ.க. கட்சியை இந்து அமைப்பான ஆர். எஸ்.எஸ். வழி நடத்துவது போல் காங்கிரஸ் கட்சியை காந்திய கொள்கை யிலும் சோசலிச கொள்கையிலும் உறுதிப்பாடும் தெளிவும் கொண்ட தலைவர்கள் ஒருங்கிணைந்து செயல் பட்டு வழி நடத்தாததே அக்கட்சி பெற்று வரும் தொடர் தோல்விகளுக்கு காரணம் என்றும் இதற்கு காங்கிரஸ் கட்சியின் தலைமையும் தலைவர் களும் அவர்களுக்கு துதிபாடும் கொள்கை இல்லாத தலைவர்களும் தான் காரணம் என்றும் குறிப்பிடு கிறார்கள்.

வேறு சிலர் "பா.ஜ.க. இந்துத்துவாவை தீவிரமான அரசியல் ஆயுதமாக பயன் படுத்தி மக்களை ஒருங்கிணைக் கிறது.

மதச்சார்பின்மையை வலியுறுத்தும் கட்சியான காங்கிரஸ் அதை தீவிரமாக முன்னெடுக்காமல் மென்மையான இந்துத்துவாவையும் மிதவாதமான மதசார்பின்னையையும் பின்பற்றுவதா லும் இவ்விடயங்களில் காங்கிரஸ் கட்சி உறுதியான மற்றும் நிலையானதொரு நிலைப்பாட்டை மேற் கொள்வதில்லை" என்றும் குற்றம் சுமத்துகிறார்கள்.

கொரோனா காலகட்டத்தில் புலம்பெயர் தொழிலாளர்கள் அடைந்த துயரம் அரசு வைத்தியசாலையில் ஒக்சிசன் பற்றாக்குறையால் உயிரிழந்த குழந்தை கள், கங்கை நதிக்கரையில் வீசப்பட்ட சடலங்கள், மிதந்த பிணங்கள், பெண் களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள், விவசாய போராட்டங்களால் மேற்கு உத்தரப் பிரதேசத்தில் பா.ஜ.க. தோல் வியை சந்திக்கும் என்ற அவதானம், லக்கிம்பூர் சம்பவம் என்று பல அநீதி களுக்குப் பிறகும் மக்கள் பா.ஜ.க. வை தெரிவு செய்திருக்கிறார்கள்.

இது எவ்வாறு சாத்தியமானது எனப் பார்க்கையில் உத்தரபிரதேசத்தில் ஆட்சி செய்த பா.ஜ.க. வாக்காளர்களிடத்தில் குறிப்பாக பெண்களின் மனதில் பாது காப்பான உணர்வை ஏற்படுத்தி இரு க்கிறார்கள். இந்த உண்மையை ஏனைய அரசியல் கட்சிகள் உணர வேண்டும். அது வாக்குகளாக மாறி பா.ஜ.க.வை வெற்றி பெறச் செய்திரு க்கிறது. பா.ஜ.க ஒருங்கிணைக்கும் "இந்துத்துவா" என்ற கோஷத்துக்கு வலிமை அதிகம் என்பதையும் புரிந்து கொண்டால் பா.ஜ.க.வை எதிர் கொள் வது எளிதாக இருக்கும்.

இந்திய வாக்காளர்களிடையே ஏற்பட்டி ருக்கும் மாற்றத்தை பா.ஜ.க. அவ தானித்த அளவிற்கு துல்லியமாக காங்கிரஸ் கட்சியினரும் அதன் தலை மையும் அதனை வழிநடத்துபவர் களும் புரிந்து கொள்ளவில்லை என் பது ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மை. தேர்தல் முடிவுக்குப் பிறகு நடை பெற்ற காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் தோல்விக்கு பொறுப்பேற்று சோனியாகாந்தி ராகுல்காந்தி பிரியங்கா ஆகியோர் தங்களது பதவிகளை இராஜினாமா செய்கிறோம் என்று உணர்ச்சிப் பூர்வமாகவும் ஆவேசமாக



வும் கூறியதாக தகவல்கள் வெளியா கின. இதனை உடனடியாக ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் அக்கட்சியின் தலைவர்கள் இல்லை என்பதால் அவர்களே தலைவராக நீடிக்கிறார்கள். தற்போதைய சூழலிலும் இந்தியா முழு வதும் பல மாநிலங்களில் 700இக்கும் மேற்பட்ட சட்டமன்ற உறுப்பினர் களை கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சி எதிர்க்கட்சியாகவே செயல்படு கிறது.

எனவே வட மாநிலங்களில் பா.ஜ.க. விற்கு மாற்றாக காங்கிரஸ் தான் இருக் கிறது. இது தான் பா.ஜ.க. வலிமை பெறவும் காங்கிரஸ் பலவீனமடையவும் காரணமாக இருக்கிறது. அதனால் பா.ஜ.க.வினை வீழ்த்த வேண்டும் என்றால் காங்கிரஸ் முதலில் தன்னு டைய அடிப்படையான கட்டமைப்பை மாற்றிக் கொள்ள முன் வர வேண்டும்.

அத்துடன் பா.ஜ.க.வுக்கு எதிராக சிறு பான்மை இன மக்களின் வாக்குகளை ஒருங்கிணைக்க காங்கிரஸ் கட்சி எடுக்கும் முயற்சியை சிறிய கட்சிகள் மற்றும் மாநில கட்சிகளின் மறைமுக மான உடன்பாட்டுடன் சிதறடித்து விடுகிறது. இதற்கு ஆம் ஆத்மி கட்சி திரிணாமுல் காங்கிரஸ் கட்சி போன் றவை மறைமுகமாக செயல்பட்டு காங்கிரஸ் கட்சியை வெற்றி பெற விடாமல் வாக்குகளை பிரித்து சிதற டித்து பா.ஜ.க.வின் வெற்றியை எளிதாக்கி விடுகிறது. இதுவும் பா.ஜ.க.விற்கு கிடைத்துவரும் தொடர் வெற்றிக்கு ஒரு காரணமாகின்றது.

உத்தரபிரதேசத்தில் கடந்த சட்டப்பே ர வைத் தேர்தலில் 312 சட்டமன்ற தொகு திகளில் வென்ற பா.ஜ.க. இந்த முறை 254 தொகுதிகளில் தான் வென்றிருக் கிறது. அதன் வாக்கு சத வீதமும் 2 சதவீதமே அதிகரித்திருக்கிறது.

சமாஜ்வாதி காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க் கட்சியினர் மொத்தமாக 51க்கும் மேற்பட்ட சதவீத வாக்குகளை பெற்றி ருக்கிறார்கள். இதன் மூலம் பா.ஜ.க. விற்கு எதிராக அனைத்து மதச்சார் பற்ற சக்திகளும் ஒன்று திரண்டால் பா.ஜ.கவை வீழ்த்த முடியும் என்பதே இத்தகைய தரவுகள் சுட்டிக்காட்டுகின் றன. பஞ்சாப் மாநிலத்தில் பா.ஜ.க. படு தோல்வியை சந்தித்திருக்கிறது. ஆனால் அது குறித்த விவாதங்களும் விமர்சனங்களும் தேசிய அளவில் பெரிதுபடுத்தப்படவில்லை. மேலும் 2024ஆம் ஆண்டில் நடைபெறும் மக்களவைத் தேர்தலுக்காக பா.ஜ.க. வாக்காளர்களை உளவியல் ரீதியாக தயார்படுத்தும் உத்தியாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது. இதனை காங் கிரஸ் கட்சியினரும் காங்கிரஸ் கட்சி யின் சித்தாந்தத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்களும் இதனை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. தமிழகத் தைப் பொறுத்தவரை மத்திய அரசின் பிரதிநிதியாக செயல்படும் ஆளுநருக்கு எதிராக தமிழக முதல்வர் ஸ்டாலின் பல விடயங்களில் கருத்துகளை ஆதாரமாக வைத்து புள்ளி விவரங் களுடன் பேசி வருகிறார். சோனியா காந்தி, ராகுல் காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சிக்கு வரலாறு காணாத அளவிற்கு அதிக துரோகங்களை செய்து வரும் இரண்டாம் கட்டத் தலைவர்கள் கட்சி தாவி இருக்கும் பா.ஜ.க.விலாவது உண் மையான விசுவாசத்துடன் அரசியல் பணியாற்ற வேண்டும்.

அதே போல் காங்கிரஸ் கட்சியில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் தலைவராக தெரிவு செய்யப்படுபவர்கள், மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து மக்கள் அறிந்த தலைவர்களாக மாற்றம் பெற்று கட்சியை வலிமைப்படுத்துப வராக அமை வதில்லை. இருப்பது மில்லை. இவ்விடயத்தில் காங்கிரஸ் கட்சி அரசியல் தளத்தில் சுயம்புவான அரசியல் இயக்கமாகவும் அரசியல் கட்சியாகவும் செயல்பட்டு மக்களின்

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
- குடந்தையான் -

நம்பிக்கையை பெற்று டெல்லி மற்றும் பஞ்சாப்பில் ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்திருக்கும் ஆம் ஆத்மி கட்சி பின்பற்றும் உத்தியை கடைபிடிக்க லாம்.

இத்தகைய ஆலோசனைகளை காங் கிரஸ் கட்சியின் தற்போதைய தலை மைகள் சிந்தித்து செயல்படுத்தாத வரை பா.ஜ.க.வின் வளர்ச்சிக்கு காங் கிரஸ் கட்சி ஒரு காரணமாகவே தொடர்ந்து நீடிக்கும் என்பது உறுதி. "இந்துத்துவா" அடையாளத்துடன் தேர்தல் அரசியலில் வெற்றி பெற்று வரும் பா.ஜ.க. இந்திய ஜனநாயகத்திற் கும் தமிழக மக்களின் நலனுக்கும் எதிரானது என்பதை புரிந்து கொண்டு அதற்கு நல்லதொரு மாற்று தலை மையையும் மாற்று அரசியலையும் தெரிவு செய்ய வேண்டும்.



# தமிழ்த்தேசியக் கட்சிகள் திருந்துவதற்கு வாய்ப்புள்ளதா?

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



ஆறு கட்சிகள் இணைந்து இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதியிருந்தன. நீண்ட காலத்திற்கு பின்னர் ஒரு விடயத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (முன்னணி) தவிர்ந்த அனைவரும் ஓரணியில் ஒன்றுபட்டிருந்தனர். இது பலராலும் வரவேற்கப்பட்டது. ஆனால் மீளவும் தமிழ் தேசிய வேதாளம் முருங்கை மரத்தில் என்பது போல் கடிதத்தில் ஒன்று பட்டவர்கள், பிறிதொரு கடிதத்தில் வேறாகினர். ஆறு கட்சிகள் ஐந்தாகின. ஐந்து கட்சிகள் தனித்தும் இலங்கை தமிழரசு கட்சி தனியாகவும் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு கடிதங்களை அனுப்பியிருந்தனர்.

இப்படித் தான் முன்னர் ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக்கு கடிதம் எழுதுவது தொடர்பில் சிவில் சமூகத்தின் ஏற்பாட்டில் ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. உண்மையில் இந்த முயற்சியானது, மன்னாரைச் சேர்ந்த சிவகரன் தலைமையில் தான் முன்னெடுக்கப்பட்டது. ஆனால் சிவகரன் தலைமை ஏற்றால் தங்களால் பங்கு கொள்ள முடியாது என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அடம் பிடித்ததால் சிவகரன் பார்வையாளர் வரிசைக்கு செல்ல சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சிலர் முன் வரிசைக்கு வந்தனர். ஆனால் அங்கும் தமிழ் தேசிய வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது. ஒரு கடிதத்துடன் அந்த (விடயத்தினடிப்படையில்) ஒற்றுமை முயற்சி முடிவுக்கு வந்தது.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஸ கூட்டமைப்பை சந்திக்க விருப்பம் தெரிவித்திருக்கின்றார். சம்பந்தன் நேரம் கேட்ட போதும் இதுவரையில் பொருட்படுத்தாத கோட்டபாய தெற்கில் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொண்டு வரும் நிலையில் கூட்டமைப்பை சந்திப்பதற்கு இணங்கியிருக்கின்றார். இந்த அடிப்படையில் அடுத்த வாரம் கோட்டா — சம்பந்தன் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இதனை கவனமாக கையாள வேண்டுமென்று டெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தியிருக்கின்றார். இது தொடர்பில் அவர் சம்பந்தனுக்கு ஒரு கடிதம் ஒன்றையும் எழுதியிருந்தார். கூட்டமைப்பின் இன்னொரு பங்காளிக்கட்சியான டி.பி.எல்.எப். (புளொட்) தலைவர் சித்தார்த்தன் அரசாங்கம் பலவீனமாக இருக்கின்ற போது அதனை நாங்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இந்த அடிப்படையில் தான் பலவீனமாக இருக்கின்ற ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவை கூட்டமைப்பு சந்திக்கவுள்ளதாக குறிப்பிடுகின்றார். இந்த கட்டுரையாளனிடம் சித்தார்த்தன் கூறுகின்ற போது நாங்கள் தான் சிந்திப்பதற்கான நேரத்தை கேட்டோம் நாங்களே நேரத்தை கேட்டுவிட்டு பின்னர், நாங்கள் எவ்வாறு சந்திப்பை புறக்கணிக்க முடியும் என்றார்.

இங்கு பிரச்சினை சந்திப்பது தொடர்பானதல்ல. சந்திக்கத் தான் வேண்டும். ஜனாதிபதியை மட்டுமல்ல — தேவைப்பட்டால் அஸ்கிரிய மல்வத்த பீடாதிபதிகளையும் சந்திக்கத் தான் வேண்டும். தேவையேற்படின் இலட்சிய இனவாதியென்று அழைக்கப்படும் குணதாச அமரசேகரவை கூட சந்திப்பதில் தவறில்லை. இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதுவர் ஜனாதிபதியை சந்தித்ததன் பின்னர் அஸ்கிரிய பீடாதிபதியை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். ஒரு பிராந்திய சக்தியின் பிரதமரான நரேந்திர மோடி பௌத்த மத பீடத்தினரை வணங்கி ஆசீர்வாதம் பெற்றிருந்தார்.



இவைகள் அவர்களது ராஜதந்திரத்தின் ஒரு அங்கமாகும்.

இவர்களே இவ்வாறான சந்திப்புக்களில் ஈடுபடுகின்ற போது கூட்டமைப்பு ஜனாதிபதியை சந்திப்பதில் என்ன தவறு? ஆனால் சந்திப்பை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது எவ்வாறான விடயங்களை முன் வைப்பது அதில் எவ்வாறான தந்திரோபாயங்களை கடைப்பிடிப்பது? போன்ற விடயங்களில் கருத்தொருமிப்பும் புரிதலும் கூட்டமைப்பினர் மத்தியில் இருக்க வேண்டும். அதற்கு முதலில் கூட்டமைப்பு கட்டமைப்பு ரீதியாக பலமாக இருக்க வேண்டும். சித்தார்த்தன் கூறுவது சரி தான் அதாவது ஒரு அரசாங்கம் நெருக்கடிகளை சந்திக்கின்ற போது தான் அதனை பேரம் பேசுவதற்கான வாய்ப்பாக தமிழர்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும்? ஆனால் பலவீனமாக இருக்கின்ற கூட்டமைப்பால் எவ்வாறு பலவீனமாக இருக்கின்ற அரசாங்கத்தை பயன்படுத்திக் கொள்ள முடியும்? அரசாங்கம் பலவீனமாக இருந்தால் கூட கூட்டமைப்பு பலவீனமாக இருக்கின்ற போது அரசாங்கமே பலமான நிலையில் இருக்கும்.

தேர்தல் அரசியலுக்கு அப்பால் தமிழ் தேசிய கட்சிகளால் சிந்திக்க முடியவில்லை. ஏனெனில் தமிழ் தேசியம் பேசும் கட்சிகளின் பிரச்சினை, கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை போன்றது. அதாவது தங்களின் கட்சிகளுக்கு கிடைக்கும் நாடாளுமன்ற ஆசனங்களும் கை நழுவி விடக் கூடாது அதேவேளை தங்களது கட்சிகளுக்கு தனித்துவமான இடமும் இருக்க வேண்டும். இந்த இரண்டையும் ஒரே தளத்தில் பேணிக்கொள்ள முற்படுவதன் காரணமாகத் தான் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் என்ன தான் சத்தம் போட்டாலும் கூட அது தமிழரசுக் கட்சியின் காதுகளில் ஏறுவதில்லை.

ஏனெனில் இவர்கள் அனைத்தையும் பேசி விட்டு இறுதியில் தமிழரசுக் கட்சியின் சினத்தின் கீழ் தான் தேர்தலை எதிர்கொள்ளப் போகின்றனர். இந்த பின்னணியில் கூட்டமைப்பில் எப்போதுமே தமிழரசு கட்சியே மேலாதிக்கம் செய்யும். ஏனெனில் கூட்டமைப்பு அப்படித்தான் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது. கூட்டமைப்பிற்கென்று ஒரு வலுவான சட்டபூர்வமான கட்டமைப்பு இருந்தால் மட்டுமே இந்த பிரச்சினையை கையாள முடியும். இல்லாவிட்டால் பங்காளிக் கட்சிகளின் சத்தங்கள் அனைத்தும் மழைக்கால புற்றீசல்களின் இரைச்சல் போன்றதாகவே அமையும். கோடை மாரியை போக்கடிப்பது போன்று தேர்தல் வந்தவுடன் அனைத்தும் காணாமல் போய் விடும்.

இந்த நிலைமையில் மாற்றம் ஏற்படாத வரையில் தமிழ் தேசிய அரசியல் பரப்பில் எந்தவொரு மாற்றமும் ஏற்படப் போவதில்லை. ஏனெனில் தமிழ் மக்கள் மத்தியில் அனைவரையும் தனது ஆளுமையால் வசீகரிக்கக் கூடிய பெரும் தலைவர்கள் எவரும் இல்லை. ஆகக் குறைந்தது அதற்கான தகுதி நிலையோடும் எவரும் இல்லை. பழைய மிதவாதத்தின் மீது விமர்சனங்களை முன் வைக்க முடிந்தாலும் கூட அன்றைய சூழலில் மிதவாத அரசியலுக்கான ஒழுக்கத்துடன் கூடிய ஆளுமைகள் இருந்தனர். இப்போதைய தமிழர் அரசியல் பரப்பு முற்றிலும் மாறுபட்டது. அதாவது பழைய மிதவாதத்தின் தோல்வி ஆயுதப் போராட்டத்தின் தோல்வியென இரண்டு வகையான தோல்விக்கும் பின்னரான அரசியல் போக்கை கையாளுவதற்கான ஒழுக்கத்துடன்ஆற்றலுடன் எவரும் இல்லை. சுருக்கமாக கூறுவதானால் இப்போது தமிழ் மக்கள் மத்தியில் வட கிழக்கிற்கான அரசியல் தலைவர்கள் இல்லை. இருப்பவர்கள் அனைவருமே குறுநில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே. இந்த நிலையில் இவர்களுக்கு குறுநில நாடாளுமன்ற பதவிகளும் தேவை, அதேவேளை கட்சிகளின் தலைவர்கள் என்னும் பதவிகளும் தேவை. இந்த இரண்டுக்கும் ஆசைப்படுகின்ற போது தேர்தல் சமரசங்களை தவிர்க்கவே முடியாது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பதவியை பொருட்படுத்துவதில்லை என்றவாறான ஒரு பார்வையை அவரது கட்சியினர் முன் வைப்பதுண்டு. ஆனால் அதுவும் உண்மையல்ல. ஏனெனில் இப்போதைய தமிழ் தேசிய அரசியலில் பதவிகளே ஒருவருக்கான அங்கிகாரமாக இருக்கின்றது. கஜேந்திரகுமார் நாடாளுமன்றம் சென்றதன் பின்னர் தான் அவர் அதிகமாக கவனிக்கப்படுகின்றார். எனவே அவர் தொடர்ந்தும் கவனிக்கப்பட வேண்டுமென்றால் அவருக்கு நாடாளுமன்ற ஆசனம் தேவை. அதன் ருசியை அவர் அறிந்திருப்பதனால் அதனை இனிமேல் இழந்து விடக் கூடாதென்னும் நோக்கிலேயே செயற்படுவார். இப்போது அதனைத் தான் செய்து கொண்டிருக்கின்றார். தான் கூறுகின்ற விடயங்களில் தான் உறுதியாக இருக்கிறேன் என்பதை தொடர்ந்தும் மக்கள் மத்தியில் விதைத்துக் கொண்டிருப்பது தான் அவரது தேர்தல் வெற்றிக்கான தந்திரோபாயம். இந்த அடிப்படையில் தான் அவ்வப்போது அவர், கட்சியை மக்கள் மத்தியில் அடையாளப்படுத்த முற்படுகின்றார். கட்சியை அடையாளப்படுத்த வேண்டும் என்றால் எதையாவது செய்து கொண்டிருக்க வேண்டும்.

கடந்த பன்னிரெண்டு வருடகால அரசியல் போக்கை உற்று நோக்கும் எவராலும் நான் மேலே குறிப்பிட்ட நிலைமைகளை தெளிவாக உணர முடியும். இந்த தேர்தல் சமரச அரசியல் போக்கில் மாற்றங்கள் ஏற்படாதவரையில் தமிழ் தேசிய அரசியல் போக்கில் எந்தவொரு ஆக்கபூர்வமான மாற்றங்களும் ஏற்படப் போவதில்லை. இந்த பின்புலத்தில் நோக்கினால் தமிழ் தேசியம் பேசும் கட்சிகள் திருந்துவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் மங்கலாகவே தெரிகின்றது. ஒரு புதிய தலைமுறை இந்த அரசியலை பொறுப்பேற்றால் ஒரு வேளை சில மாற்றங்கள் ஏற்படக்கூடும். உடனடியாக (20ம் பக்கம் பார்க்க)

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 09.05.1956

சிவன் அடியில் 29.03.2018

சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைப் பிறப்பிடமாகவும்
சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த
அமரர் திரு சற்குணசிங்கம் ஞானகுணாளன்

நீங்கா நினைவுகள் தந்து நீண்ட தூரம் சென்று
ஆண்டுகள் நான்கு கடந்தாலும்
ஓயவில்லை உன் நினைவுகள்
பார்த்தி விழிகள் தேடுகின்றன ஆறாது உன் நினைவுகள்
அழியாது உன் புன்னகை

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
நித்தம் உன் நினைவுகளுடன் அம்மா, மனைவி,
பிள்ளைகள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்

# இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் தமிழ்நாட்டிற்குத் தப்பிச் செல்லும் தமிழர்கள்



(9ம் பக்கத் தொடர்ச்சி) இலங்கை அகதியை திருமணம் செய்தேன். பின் இலங்கையில் போர் முடிவுக்கு வந்ததால் விமானம் மூலம் இலங்கைக்கு சென்று வாழ்ந்து வந்தோம். எனக்கும் என் கணவருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக கடந்த 9 மாதங்களாக நான் அவரிடம் இருந்து பிரிந்து வாழ்ந்து வருகிறேன். தற்போது இலங்கையில் உள்ள சூழ்நிலையில் எனது இரண்டு குழந்தைகளை வைத்துக் கொண்டு என்னால் தனியாக வாழ இயலாது. எனவே தமிழ்நாட்டில் அகதிகள் முகாமில் தங்கியுள்ள உறவினர்களுடன் சேர்ந்து வாழ்வதற்காக மீண்டும் படகு மூலம் அகதியாக தனுஷ்கோடி வந்தேன்" என்று கூறினார் கியூரி.

### உயிரைக் காத்துக் கொள்ள 2வது முறையாக தமிழகத்தில் தஞ்சம்

தமிழகத்திற்கு அகதியாக வந்துள்ள சிவரத்தினம் பிபிசி தமிழிடம் பேசுகையில் நான் மன்னார் மாவட்டத்தில் மீன் பிடி தொழில் செய்து வருகிறேன். தற்போது இலங்கையில் தொடர்ந்து அத்தியாவசிய பொருட்களான அரிசி, பருப்பு, கோதுமை, சர்க்கரை, பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அங்கு சாமானிய மக்கள் வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் எனது குடும்பத்துடன் எனது அக்கா குடும்பத்தையும் சேர்த்து 10 பேர் திங்கள்கிழமை புறப்பட்டு செவ்வாய்க்கிழமை இரவு தனுஷ்கோடி வந்து சேர்ந்தோம்.

இலங்கையில் தற்போது அரிசி 300 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. 300 ரூபாய் கொடுத்தாலும் போதிய அரிசி கிடைப்பதில்லை குழந்தைகளுக்கு கலந்து கொடுக்கும் பால் மாவு விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது. இலங்கையைப் பொறுத்த அளவு தற்போது உள்ள சூழ்நிலையில் கடுமையாக உழைத்தால் ஒரு வேளை சாப்பாடு சாப்பிட முடியும் ஆனால் போதிய வேலைவாய்ப்பு இல்லாததால் நாங்கள் குடும்பத்துடன் இந்தியா வந்துள்ளோம்.

எங்களை போல் இலங்கையில் வசிக்கும் பெரும்பாலானோர் தமிழகத்திற்கு வருவதற்கு தயாராகி வருகின்றனர். இருப்பினும் பைப்பர் படகிற்கு போதிய மண்ணெண்ணை கிடைக்காததாலும் மண்ணெண்ணெய் விலை உயர்வால் வாங்க இயலாததாலும் இலங்கையில் தங்கி உள்ளனர்.

நான் தனுஷ்கோடி வந்தது எனது சொந்த படகு என்பதால் 15 ஆயிரம் ரூபாய்க்கு மண்ணெண்ணெய் வாங்கி கொண்டு குடும்பத்துடன் அகதியாக தமிழகம் வந்துள்ளேன். இலங்கையில் ஒரு குடும்பம் ஒரு நாளைக்கு வயிறார சாப்பிட 2500 ரூபாய் தேவைப்படும் அதுவும் இரண்டு வேளை உணவு மட்டும் சாப்பிட முடியும் அடுத்த வேளைக்கு மீண்டும் சமைக்க வேண்டும்.

1990 ஆம் ஆண்டு இறுதிக்கட்ட போரின் போது உயிரை காப்பாற்றி கொள்ள அகதியாக வந்து மண்டபம் அகதிகள் முகாமில் தங்கியிருந்தேன். இலங்கையில் பிரச்சனை முடிவுக்கு வந்த பின்பு 2012 ஆம் ஆண்டு விமானம் மூலம் மீண்டும் இலங்கைக்குச் சென்றேன். ஆனால் தற்போது இலங்கையில் நிலவும் உணவு பொருள் தட்டுப்பாடு காரணமாக பட்டினிச் சாவு இருந்து பிழைப்பதற்காக மீண்டும் இரண்டாவது முறையாக தமிழகத்திற்கு அகதியாக வந்து உள்ளேன் என்றார் சிவரத்தினம்.

### ஒரு நாள் சாப்பாட்டிற்கு 3000 ரூபா செலவு

இலங்கையில் இருந்து வந்துள்ள சிவசங்கரி பிபிசி தமிழிடம் பேசுகையில் ஒரு நாளைக்கு ஒரு வேளை சாப்பாட்டுக்கு இரண்டாயிரம் ரூபாய் வரை செலவாகிறது. அதுவே அசைவ உணவு சமைத்து சாப்பிட வேண்டும் என்றால் 3 ஆயிரம் முதல் 4 ஆயிரம் ரூபாய் வரை ஒரு வேலைக்கு செலவாகிறது என்றார்.

எனது கணவர் கூலி வேலைக்கு செல்கிறார். அவருக்கு தினசரி வருமானம் 1500 ரூபாய் மட்டுமே கிடைக்கிறது.இந்த வருமானத்தை வைத்து என்னால் எப்படி என் குழந்தையுடன் இலங்கையில் வாழ முடியும் எனவே என் தம்பி குடும்பத்துடன் படகில் இந்தியாவுக்கு அகதிகளாக வந்துள்ளோம்.

இலங்கை அரசு இதுவரை எந்த விதமான உதவியும் மக்களுக்கு செய்யவில்லை. இலங்கையில் பெரும்பாலானோர் தமிழகத்திற்கு வர தயாராக இருக்கின்றனர். ஆனால் அவர்கள் எப்போது வருவார்கள் என்பது குறித்து தகவல் எதுவும் தெரியாது.

என் தம்பி என்னையும் என் குடும்பத்தையும் தமிழகத்திற்கு அகதியாக செல்ல அழைத்த போது இங்கிருந்து கஷ்டப்படுவதற்கு பதில் இந்தியா போவோம் "பிழைத்தால் இந்தியாவில் வாழ்வோம் இல்லையெனில் கடலோடு சாவோம்" என்று முடிவு செய்து தான் திங்கள்கிழமை காலை 9.00 மணிக்கு மன்னாரில் இருந்து கிளம்பினோம்.

கிளம்பி ஒரு மணி நேரத்தில் படகு என்ஜினில் பழுது ஏற்பட்டு நடுக்கடலில் நின்றது. இன்ஜினை சரி செய்ய சுமார் 37 மணி நேரத்துக்கு மேலானதால் இன்ஜினை சரி செய்யும் வரை கடும் வெயிலில் குடிநீர் உணவு இல்லாமல் உயிருக்கு போராடிய நிலையில் செவ்வாய்க்கிழமை இரவு 11.00 மணியளவில் தனுஷ்கோடி வந்து சேர்ந்தோம்.

இலங்கையில் இருக்கும் மக்கள் மன அழுத்தத்தில் வாழ்ந்து வருகின்றனர். காரணம் காலை எழுந்ததில் இருந்து இரவு தூங்கும் வரை ஒவ்வொரு மணி நேரத்தையும் கடப்பது கடும் சவாலாக உள்ளது. இன்னும் சில நாட்களில் தமிழகத்திற்கு அகதிகளாக அதிகமான இலங்கை தமிழர்கள் வர வாய்ப்புள்ளது" என்று தெரிவித்தார் சிவசங்கரி.

### உரிய ஆவணங்கள் இல்லாததால் சட்ட நடவடிக்கை?

தமிழகத்திற்கு வரும் இலங்கை அகதிகள் மீது எடுக்கப்பட்டு வரும் சட்ட நடவடிக்கைகள் குறித்து கடலோர காவல் குழும கண்காணிப்பாளர் குணசேகரன் பிபிசி தமிழிடம் பேசுகையில் 2012ஆம் ஆண்டுக்கு பிறகு இலங்கையில் இருந்து கடல் வழியாக சட்டவிரோதமான முறையில் தமிழகத்திற்கு வரும் இலங்கை தமிழர்கள் அகதிகளாக பதிவு செய்யாமல் அவர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இலங்கையில் இருந்து வரக் கூடிய நபர்கள் உரிய ஆவணங்களுடன் விமானம் மூலம் வந்தால் மட்டுமே தமிழகத்திற்குள் அனுமதிக்க முடியும். உரிய ஆவணங்கள் இன்றி வரும் நபர்கள் மீது நிச்சயம் வழக்கு பதிவு செய்து சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள். அதன் அடிப்படையில் தான் தற்போது தனுஷ்கோடி வந்துள்ள இலங்கை தமிழர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இலங்கையில் இருந்து குழந்தைகளுடன் தமிழகம் வரும் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தமிழகத்தில் தங்க அனுமதி கோரினால் அதை ஏற்க முடியாது. அவர்கள் எந்த நோக்கத்தோடு தமிழகத்திற்குள் வருகிறார்கள், அவர்கள் யார் என்ற பல்வேறு கோணங்களில் சந்தேகம் உள்ளதால் சட்டரீதியான நடவடிக்கை மட்டுமே எடுக்கப்பட்டு வருவதாக மெரைன் காவல் கண்காணிப்பாளர் குணசேகரன் தெரிவித்தார்.

### சர்வதேச கடல் எல்லையில் கண்காணிப்பு

கடந்த செவ்வாய்கிழமை ஒரே நாளில் 16 இலங்கை தமிழர்கள் இரு நாட்டு பாதுகாப்பையும் மீறி கடல் வழியாக படகில் தமிழகத்திற்குள் நுழைந்தது கடல் பாதுகாப்பு அதிகாரிகள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் நிலவி வரும் கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக இன்னும் பலர் தமிழகம் வர தயாராக இருப்பதாக இலங்கையில் இருந்து வந்துள்ள இலங்கை தமிழர்களிடம் நடத்திய விசாரணையில் தெரிய வந்துள்ளது. இந்திய கடற்பரப்பில் கடற்படை, கடலோர காவல் படை அதிகாரிகள் பாதுகாப்பை தீவிரப்படுத்த முடிவு செய்ததுடன் கடற்கரை ஓரங்களில் தமிழக கடலோர காவல் குழும போலீசார், மத்திய, மாநில உளவுத் துறை அதிகாரிகள் தொடர்ந்து தீவிர கண்காணிப்பில் ஈடுபட திட்டமிட்டுள்ளதாக இந்திய கடலோர காவல் படை அதிகாரி ஒருவர் பிபிசியிடம் தெரிவிததார். நன்றி — பிபிசி


Toronto thiruchendur murugan temple
ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயம்

19 Penn Dr, North York, ON M9L 2A6. 416 744 9568
www.ttmtemple.com - Email: info@ttmtemple.com

ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலய மகாசபை கூட்டம் பற்றிய அறிவித்தல்

24/02/2022

ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலய நிரந்தர அங்கத்தவர்கள் அனைவருக்கும் அறியத்தருவது.

எமது ஆலய பொதுக்கூட்டம் எதிர் வரும் சித்திரை மாதம் 17/04/2022 ஞாயிற்றுக்கிழமை பிறப்பகல் 3.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும் என்பதனை அங்கத்தவர்களுக்கு அறியத்தருகின்றோம்.

அன்றைகூட்டத்தில்

- ✓ வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தல்
- ✓ ஆலய அடைமானக்கடனை திரும்ப செலுத்துவற்கான பொறுப்பேற்றல்
- ✓ எதிர் வருங்காலங்களில் புனரமைப்பு பணிகள் பற்றிய கலந்துரையாடல்
- ✓ புதிய நிர்வாகசபை தேர்வு
- ✓ உப நிர்வாகசபை தேர்வு

என்பன இடம் பெறும்

அங்கத்தவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும் என்பதால் இதுவரை அங்கத்தவர்கள் ஆகாதவர்கள் ஆலய காரியாலயத்தில் தொடர்பு கொண்டு உங்களுடைய பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**முக்கிய குறிப்பு**
அங்கத்துவம் தனிநபருக்கானதே தவிர குடும்பத்தினருக்கானது அல்ல ஒரு அங்கத்துவ கட்டணம் தனி ஒரு நபருக்கானதே என்பதனையும் அறியத்தருகின்றோம்

மகாத்மநாதன் கதிர்காமநாதன்
செயவாலர்
ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயம்

24/02/2022

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# மீண்டும் காலூன்றிய இந்தியா!

கட்டுரையாளர்:
இந்தியாவில் இருந்து
கேணல் ஹரிஹரன்





இந்தியா இலங்கைக்கு உதவுவதற்கு முன்வந்த போதும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற வேண்டும் என நிபந்தனை விதித்துள்ளதோடு தமது திட்டங்களை முன்னெடுப்பதற்கான தடைகளை நீக்குமாறும் வலியுறுத்தியது.

**பலாலியையும் காங்கேசன்துறையையும் திறந்து விட வேண்டும் என்ற புதிய கொக்கியை போட்டிருக்கும் இந்தியாவுக்கு தலையாட்டுவதை விட வேறு வழியின்றி இருக்கிறது இலங்கை அரசாங்கம்**

அத்தியாவசியப் பொருட்களுக்கான வரிசைகளும் பொதுமக்களின் கோபமும் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களும் அதிகரித்துள்ள இந்தியாவிடம் ஒரு பில்லியன் டொலர்கள் கடனுதவியைப் பெறும் உடன்பாட்டில் கைச்சாத்திட்டிருக்கிறது இலங்கை அரசாங்கம்.

மோசமடைந்துள்ள வெளிநாட்டு நாணயக் கையிருப்பு நெருக்கடியினால் நாட்டின் நிர்வாகத்தை நடத்த முடியாத நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் இருந்து தப்பிக்க தனது இறுக்கமான கொள்கைகள் சிலவற்றில் இருந்து அரசாங்கம் விலகியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடியுள்ளதுடன் அதனுடன் பேச்சுக்களையும் தொடங்கியிருக்கிறது.

அத்துடன் இதுவரை இந்தியாவின் திட்டங்களை முடக்கி வைத்து இழுத்தடித்துக் கொண்டிருந்த அரசாங்கம் அவற்றைத் துரிதப்படுத்துவதற்கான பாதையை திறந்து விட்டு இந்தியாவின் பொருளாதார உதவிகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

இந்த ஆண்டு ஜனவரி மாதத்துக்குப் பின்னர் இதுவரை இந்தியாவிடம் இருந்து 2.4 பில்லியன் டொலர்களை இலங்கை அரசாங்கம் கடனாகப் பெற்றிருக்கிறது. இதற்குப் பதிலீடாக இதுவரை தேங்கியிருந்த பல திட்டங்களுக்கு இலங்கை அரசாங்கம் பச்சைக் கொடி காண்பித்துள்ளது.

கொழும்பு மேற்கு கொள்கலன் முனைய திட்டம் அதானி குழுமத்துக்கு வழங்கப்பட்டது இதன் தொடக்கம் எனலாம் அதற்குப் பின்னர் திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை கூட்டாக அபிவிருத்தி செய்யும் உடன்பாடு கையெழுத்திடப்பட்டது.

அண்மையில் சம்பூரில் சூரியசக்தி மின் திட்டத்தை அமைப்பதற்கு இந்தியாவின் தேசிய அனல்மின் நிறுவனத்துடன் உடன்பாடு செய்யப்பட்டுள்ளது.

பூநகரியிலும் மன்னாரிலும் 500 மெகாவாட் திறன்கொண்ட காற்றாலை மின் திட்டங்களை அமைக்க அதானி குழுமத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் மூலமாக இலங்கையின் பொருளாதார விவகாரங்களில் இந்தியா தனது ஆதிக்கத்தை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்ற அதேவேளை இலங்கைக்கு உதவுவதற்கான தடைகளும் அகற்றப்பட்டிருக்கின்றன.

முட்டுக்கட்டைகளை அகற்றுவதன் மூலமே இந்தியாவின் உதவிகளைப் பெறக்கூடிய நிலை அரசாங்கத்துக்கு இருந்தது. இலங்கை வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. கடந்த செவ்வாயன்று ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்ட எதிர்க்கட்சியினர் நடத்திய மிகப்பெரிய போராட்டத்துக்குப் பின்னர் பொருளாதார நிலை மற்றும் அரசாங்கத்தின் கொள்கை மாற்றம் தொடர்பாக நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி உரையாற்றியிருந்தார். ரூபாவை மிதக்க விட்ட பின்னர் டொலரின் பெறுமதி 275 ரூபா வரை உயர்ந்துள்ளதால் மக்கள் குழப்பமடைந்திருக்கிறார்கள். அதனை நியாயப்படுத்தும் வகையில் அவர் சில பொருளாதார தரவுகளை வழங்கியிருந்தார்.

ரூபா நெகிழ்வுடன் இயங்குவதற்கு அனுமதிக்கப்பட முன்னர் இந்த ஆண்டு ஏற்றுமதி வருமானமாக 12 பில்லியன் டொலர்கள் எதிர்பார்க்கப்பட்டதாகவும் இந்த ஆண்டு ஏற்படக் கூடிய இறக்குமதி செலவு 22 பில்லியன் டொலர்களாக இருக்கும் என்றும் இதனால் 10 பில்லியன் டொலர்கள் வர்த்தகப் பற்றாக்குறை ஏற்படும் என்றும் ஜனாதிபதி கூறியிருந்தார். சுற்றுலா தகவல் தொழிநுட்பம் போன்ற சேவை ஏற்றுமதியில் இருந்து 03 பில்லியன் டொலர்களும், வெளிநாட்டு தொழிலாளர்களின் பரிமாற்றம் மூலம் 02 பில்லியன் டொலர்களும் கிடைக்கும் என்பதால் வர்த்தகப் பற்றாக்குறை 05 பில்லியன் டொலர்களாக இருக்கும். இந்த ஆண்டு 6.9 பில்லியன் டொலர்கள் கடன் தவணைகள் மற்றும் இறையாண்மை பத்திரங்களுக்கு செலுத்தப்பட வேண்டும் என்பதால் வர்த்தப் பற்றாக்குறை 11.9 பில்லியன் டொலர்களாக உயரும். கடன் உதவிகள் முதலீடுகளாக 2.5 பில்லியன் டொலர்கள் கிடைக்கும் என்பதால் அந்நியச் செலாவணியில் மொத்தம் 9.4 பில்லியன் டொலர்கள் பற்றாக்குறை காணப்பட்டது. ஆனால் ரூபா மிதக்க விடப்பட்ட பின்னர் ஏற்றுமதி வருமானம் 13 பில்லியன் டொலர்கள் வரை அதிகரிக்கும். இறக்குமதி செலவை 22 பில்லியன் டொலர்களில் இருந்து 20 பில்லியன் டொலர்களாக குறைக்க முடியும். இதன் மூலம் வர்த்தக பற்றாக் குறையை 07 பில்லியன் டொலர்கள் வரை குறைக்க முடியும்.

சேவை ஏற்றுமதியின் மூலம் 04 பில்லியன் டொலர்கள் மற்றும் வெளி நாட்டு தொழிலாளர்களின் பரிமாற்றம் மூலம் 05 பில்லியன் டொலர்களையும் எதிர்பார்க்கலாம் என்பதால் வர்த்தக பற்றாக்குறை 2.4 பில்லியன் டொலர்களாக இருக்கும்" என்றும் கணக்கு காண்பித்துள்ளார் அவர்.

இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்காகவே சர்வதேச நாணய நிதியத்தின் உதவியும் இந்தியாவின் உதவியும் பெறப்பட்டுள்ளது. இந்தியா உதவுவதற்கு முன் வந்த போதும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற வேண்டும் என நிபந்தனை விதித்திருக்கிறது. அதே வேளை தமது திட்டங்களை முன்னெடுப்பதற்கான தடைகளை நீக்குமாறும் வலியுறுத்தியது. அந்த தடைகளை அகற்றப்பட்டதும் இப்போது இலங்கையில் இந்தியா வலுவாக காலூன்றியிருக்கிறது. எரிசக்தி திட்டங்கள் துறைமுகம், போன்றவற்றில் இந்தியா செய்கின்ற முதலீடுகள், இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பு விரிவாக்கத்தை மட்டும் அடிப்படையாக கொண்டதல்ல.

அதற்கு அப்பால் இலங்கையில் இந்தியா தனது பொருளாதார செல்வாக்கை அதிகரிக்கவும் வழி வகுத்துள்ளது. இதன் மூலம் மின்சாரம், எரிபொருள் விநியோக கட்டமைப்பில் இந்தியா தவிர்க்க முடியாத சக்தியாக மாறுகிறது.

முன்னதாக அம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்பு துறைமுக நகரம், கொழும்பு துறைமுகம், போன்ற பல திட்டங்களின் மூலம் இலங்கையில் சீனாவின் பொருளாதார ஆதிக்கம் அதிகரித்தமை இந்தியாவைப் பெரிதும் கவலை கொள்ள வைத்திருந்தது. சீனாவின் இந்த ஆதிக்கத்தில் இருந்து இலங்கையை வெளியே கொண்டு வந்து தனது செல்வாக்குப் பரப்பை இங்கு விரிவுபடுத்துவதற்கு வழி தெரியாமல் இந்தியா திகைத்துப் போயிருந்த ஒரு கட்டத்தில் தான் இலங்கையின் பொருளாதார நெருக்கடி அதற்கு வாய்ப்பாக அமைந்திருக்கிறது. சினோபாம் தடுப்பூசிகளை அனுப்பி தடுப்பூசி இராஜதந்திரத்தின் மூலம் சீனா பெற்ற மேலாண்மை நிலையை இப்போது பொருளாதார இராஜதந்திரத்தின் மூலம் இந்தியா கைப்பற்றியிருக்கிறது.

இலங்கைக்கு பொருளாதார ரீதியான உதவிகளை வழங்குவதற்கு இந்தியா விதித்த பல நிபந்தனைகளில் அல்லது இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொண்ட நிபந்தனைகளில் சுற்றுலா மற்றும் இருதரப்பு தொடர்புகளை அதிகரித்துக் கொள்வதும் அடங்கும். இராமாயண கால வரலாற்று இடங்கள் இலங்கையில் இருக்கின்றன. அவற்றுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு இந்திய சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்கு போக்குவரத்து வசதிகள் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

அதற்காக 2018இல் இணங்கிக் கொள்ளப்பட்டபடி காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் பலாலி விமான நிலைய அபிவிருத்திகளை விரைவுபடுத்த வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியிருக்கிறது. முன்னதாக வடக்கு, கிழக்கிற்கும் இந்தியாவுக்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்த இந்த திட்டங்கள் அவசியம் என்று கூறியது இந்தியா. ஆனால் இலங்கை அரசாங்கம் பலாலி விமான நிலையம் மீளத் திறக்கப்படுவதையோ காங்கேசன் துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படுவதையோ விரும்பவில்லை. இதற்கான நிதி ஒதுக்கீட்டை வழங்க இந்தியா முன்வந்த போதும் அந்த திட்டங்களை செயற்படுத்துவதை அரசாங்கம் இழுத்தடித்து வந்தது. இப்போது இலங்கை அரசாங்கம் சுற்றுலாத் துறை வருமானத்தை எதிர்பார்க்கிறது. இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் முதலிடத்தில் இருப்பவர்கள் இந்தியர்கள் தான். அவர்களை மேலும் அதிகளவில் இலங்கையை நோக்கி இழுக்க வேண்டுமானால் பலாலியையும் காங்கேசன் துறையையும் திறந்து விட வேண்டும் என்று புதிய கொக்கியை போட்டிருக்கிறது (20ம் பக்கம் பார்க்க)

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# மீண்டும் காலூன்றிய இந்தியா!

(19ம் பக்கத் தொடர்ச்சி) இந்தியா இதற்குத் தலையாட்டுவதை விட வேறுவழியின்றி இருக்கிறது இலங்கை அரசாங்கம். பலாலி விமான நிலையம் மீளத் திறக்கப்படுவதை வலியுறுத்தவே இந்தியப் பிரதமர் மோடி, இம்மாத இறுதியில் பலாலி விமான நிலையத்தின் ஊடாக யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்றும் கருதப்படுகிறது.

அதேவேளை பஷில் ராஜபக்ஷவின் இந்தியப் பயணத்தின் போது டிஜிட்டல் மயமாக்கல் தொடர்பாகவும் பேச்சுக்கள் நடத்தப்பட்டதாக ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அது மிக முக்கியமானதொரு விடயம். இந்தியாவில் நடைமுறையில் உள்ள ஆதார் அட்டையைப் போல இலங்கையிலும் டிஜிட்டல் அடையாள அட்டை முறையை அரசாங்கம் அறிமுகப்படுத்தவுள்ளது. அந்தத் திட்டத்தை அதாவது இலங்கையிலுள்ள அனைத்து குடிமக்களினதும் தரவுகளைத் திரட்டி கணினிமயப்படுத்தி அடையாள அட்டைகளை வழங்கும் பொறுப்பு முன்னர் பாகிஸ்தான் நிறுவனம் ஒன்றிடம் வழங்க திட்டமிடப்பட்டது.

அதனை இந்தியா விரும்பவில்லை. தனது பாதுகாப்புக்கு அது பாதிப்பை ஏற்படுத்தும் என்று இந்தியா கருதியது. இப்போது அந்தத் திட்டம், இந்தியாவினால் முன்னெடுக்கப்படவுள்ளது. இதன் மூலம் ஒட்டுமொத்த இலங்கையர்களினதும் அனைத்து தரவுகளும் இந்தியாவின் விரல் நுனியில் இருக்கும். அத்துடன் பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்காக இந்தியாவும் இலங்கையும் இணைந்து செயற்படவும், போர்க்காலத்தில் சிக்கல்களைத் தீர்க்க உருவாக்கப்பட்டிருந்த மூவரணி போல இருதரப்பு உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுக் களை அமைத்து கிரமமான தொடர்புகளைப் பேணவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வாறாக இலங்கையின் பொருளாதார நெருக்கடி இந்தியாவுக்கு கை கொடுத்திருக்கிறது. இலங்கையுடன் விட்டுப் போயிருந்த பல கால பிணைப்பை வலுப்படுத்தவும் தனது பிராந்திய தலைமைத்துவத்தை உறுதிப்படுத்தவும் இந்தியாவுக்கு வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

ஆனால் இந்த நெருக்கடியைப் பயன்படுத்தி தமிழர் பிரச்சினையை தீர்க்கும் வாய்ப்பை இந்தியா பயன்படுத்தவில்லை. அதுபற்றி ஏதும் வாய் திறக்கப்பட்டதாகவே தகவல்கள் இல்லை. இது தமிழர் தரப்புக்கு ஏமாற்றத்தை அளிக்கும் ஒரு விடயம்.

இந்தியாவின் "தி பெடரல்" என்ற ஆங்கில ஊடகம் அண்மையில் இந்தியப் பிரதமர் மோடியின் இலங்கைப் பயணத்தில் எதனை எதிர்பார்க்கிறீர்கள் என பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடம் கேள்வி எழுப்பியிருந்தது.

அதற்கு அவர் இந்திய அரசாங்கத்திடம் நாங்கள் பல கோரிக்கைகளை முன்வைத்து வருகிறோம் என்பது உண்மை தான், ஆனால் இந்த பயணத்தின் போது எங்களின் கோரிக்கைகள் எதுவும் நிவர்த்தி செய்யப்படுமா என்று எனக்குத் தெரியவில்லை. பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்." என்று நம்பிக்கையீனமாகப் பதிலளித்திருக்கிறார். இந்தப் பதில் இந்தியா தமிழர்களிடம் இருந்து விலகிச் செல்வதை உணர்த்துவதாகவே தெரிகிறது.

## தமிழ்த்தேசியக் கட்சிகள் திருந்துவதற்கு வாய்ப்புள்ளதா?

(17ம் பக்கத் தொடர்ச்சி) இல்லாவிட்டால் கூட காலப் போக்கில் சில மாற்றங்கள் ஏற்படக் கூடும். இல்லாவிட்டால் அரசியல் கட்சிகளுக்கு வெளியில் அரசியல் கட்சிகளின் கலப்பற்ற வகையில் மக்கள் இயக்கமொன்று தோற்றம் பெற வேண்டும். அதுவும் எழுதுவது போன்று பேசுவது போன்று இலகுவானதொரு விடயமல்ல.

ஏனெனில் மக்கள் இயக்கம் ஒன்றை வழிநடத்துவதற்கு ஏற்றவாறான கவர்ச்சி மிக்க தலைவர் ஒருவர் தேவை. மக்கள் இயக்கங்கள் தோற்றம் பெற்ற இடங்களிலெல்லாம் அனவசியமுள்ள தலைவர்கள் தோன்றியிருப்பதை காணலாம். தமிழ் சூழலில் அதற்கான வாய்ப்புக்களும் மிகவும் மங்கலாகவே தெரிகின்றது. இந்த நிலையில் இருக்கின்ற கட்சிகளை முற்றிலுமாக தவிர்க்கவும் முடியாது, அதேவேளை அவற்றை நெறிப்படுத்தி சரியான பாதையிலும் கொண்டு செல்ல வேண்டும்.

## தமிழர் பலத்தை சிதைக்கும்

(7ம் பக்கத் தொடர்ச்சி) அலங்கார வளைவு அகற்றப்பட்டது. மாதா சுருவம் நிறுவப்பட்டது. என மன்னாரில் தொடர்கின்ற பல சம்பவங்களுக்குப் பின்னாலும் இவ்வாறான உள்நோக்கங்களே இருப்பதாக சந்தேகங்கள் உள்ளன.

மன்னாரில் கோவில்மோட்டைக் காணிகளுக்கு மடுத் தேவாலயம் உரிமை கோருவதும் அவர்களிடம் இருந்து வயல் காணிகளைப் பெறுவதற்காக ஞானசார தேரரின் துணை நாடப்பட்டதற்குப் பின்னாலும் இவ்வாறான இரகசிய நிகழ்ச்சி நிரல்கள் இருப்பதை மறுக்க முடியாது.

திருக்கேதீஸ்வர ஆலய முகப்பில் மாதாவின் சுருவம் வைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் குருந்தூர் மலை ஐயனாரின் சூலம் பிடுங்கியெறிப்பட்ட போது சும்மா பார்த்துக் கொண்டு தான் இருந்தார்கள். அரச மரங்கள் இருக்குமிடங்களில் புத்தர் குடியேறிய போதும் விகாரைகள் கட்டப்பட்ட போதும் அவர்கள் அமைதியாக இருந்தனர்.

மாதாவின் சுருவத்தை அகற்ற வேண்டும் என்பவர்கள் யாரும் பௌத்தர்கள் வசிக்காத பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள விகாரைகளை அகற்றுவதற்காக குரல் கொடுக்கவில்லை.

ஆக தமிழரின் இன விடுதலைக்கான அரசியல் போராட்டத்தை மத சாதிய அரசியலினால் பிளவுபடுத்தும் முயற்சிகளே முனைப்படைந்திருக்கின்றன.

இத்தகைய சக்திகள் உள்ளக ரீதியாகவும் வெளியக ரீதியாகவும் செயற்படுகின்றன. இந்தச் சக்திகளின் நிகழ்ச்சி நிரலை சரியாக உடைத்தெறியா விட்டால் தமிழ்த் தேசியத்தின் பின்னால் ஒன்றுபட்டு நிற்கவோ ஒன்றுமையாக பலம் பெறவோ முடியாது போகும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca மின்னிதழ்
மூலமாக வாசிக்கலாம்.

SHIVA DURGA ASTROLOGY CENTER






PRIVATE & CONFIDENTIAL



PANDIT: KRISHNAM RAJU

Solutions & Suggestions on:

Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.
Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob.
Vasthu Prob
Real Estate
and all other Problems

பிரபல மந்திரிமார்களும், நடிகர், நடிகைகளுக்கு ஜோதிடம் பார்த்து புகழ் பெற்றவர். கைரேகை பார்த்து, முகரேகை பார்த்து, ஜாதகம் பார்த்து, ராசி நட்சத்திரமும் பார்த்து, பிறந்த ஆண்டு திகதி பார்த்து நடந்தது நடந்துகிட்டு இருக்கிறது நடக்கப் போறது பற்றிச் சொல்லுவார்

- குடும்ப காதல் விடயங்கள், மனை விவகாரங்கள்.
- கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை பிணக்குகள்.
- குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு.
- திருமணயோகம், காதல் விவகாரங்கள்.
- தொழில், மனை, அபிவிருத்தி, முன்னேற்றம், லட்சுமிகடாட்சம்.
- வாகன மனைப்பொருத்தங்கள், வீசாப் பிரச்சனைகள், கோட்டு வழக்கு.
- ஆரோக்கியப் பாக்கியம், வியாழ முன்னேற்றம், சேவன கோளாறும்.
- பேய் பிசாசு தொந்தரவா, எதிர்ப்பால தொந்தரவா, கண்திருஸ்டி.
- நாகதோசம் போன்ற எந்தப் பிரச்சினையாக இருந்தாலும்.

உடனே பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம். ஏற்கனவே வேறு பல சாஸ்திரிகளை சந்தித்து மனவேதனையுடன் இருந்திருப்பீர்கள். ஒருதரம் பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம்.

An Expert Spirtualist treats Black Magic, Witchcraft, Jaadu, Obeau and gives 100% Immediate Protection

880 Markham Rd, Scarborough ON M1H 2Y2
(MARKHAM RD. & PAINTED POST DR.)

437-213-3305

# அரசியலில் கர்மவினைப் பயனெல்லாம் கிடையாது

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட காணி சென்னைக்கு அருகே விற்பனைக்கு உண்டு இது ஒரு விளம்பரம் அல்ல. அண்மைய நாட்களில் சமூக வலைத்தளங்களில் ஒரு ஒளிப்படத்துடன் சேர்ந்து பகிரப்படும் ஒரு குறிப்பு இது. அந்த ஒளிப்படத்தில் என்ன இருக்கிறது என்றால் இந்தியப் பிரதமர் மோடிக்கு முன் பசில் ராஜபக்ச பவ்வியமாக அமைந்திருக்கும் காட்சியாகும்.



வழமை போல இந்தியா இம்முறையும் நெருக்கடியான காலகட்டத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு உதவியிருக்கிறது. இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து இந்தியா இலங்கைக்கு வழங்கி வரும் கடன்கள் இலங்கை அரசாங்கத்துக்கு மூச்சு விடும் அவகாசத்தை வழங்கியிருக்கின்றன. அதற்கு பிரதியுபகாரமாக அரசாங்கம் சம்பூரில் மீளப் புதுப்பிக்கும் மின்சக்தி திட்டத்தை அமைப்பதற்கு இந்திய நிறுவனம் ஒன்றுக்கு அனுமதி வழங்கியுள்ளது. அதே போல மன்னாரிலும் பூநகரியிலும் இரு வேறு மீளப்புதுப்பிக்கும் மின்சக்தி திட்டங்களை உருவாக்க இந்தியாவின் அதானி குழுமத்துக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது இந்தியா அவசரத்துக்கு கடனைக் கொடுத்து இலங்கைத்தீவின் மீது தனது பிடியை இறுக்கி வருகிறது என்று பொருள்.

இனப்பிரச்சினையில் இந்தியாவை மீண்டும் தலையிடக் கோரி ஆறு தமிழ் கட்சிகள் அன்மையில் இந்தியாவுக்கு கூட்டாக ஒரு கடிதத்தை அனுப்பியிருக்கும் பின்னணியில் இப்புதிய நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதை முன் வைத்து மேற்படி கட்சிகளை விமர்சிப்பவர்கள் கூறுகிறார்கள், இந்தியா மீண்டும் தன்னுடைய பிராந்திய நலன்களை பாதுகாக்கும் நோக்கத்தோடு தான் செயற்பட்டு வருகிறது என்று. அது தான் உண்மை. இந்தியா மட்டுமல்ல சீனாவும் சரி அமெரிக்காவும் சரி ஏன் ஐநாவும் சரி ஏதோ ஒரு அரசியல் இலக்கை முன் வைத்து அதற்குரிய நிகழ்ச்சி நிரலின்படி தான் இலங்கை தீவை அணுகும். அரசியலில் எல்லாமே நலன்சார் உறவுகள் தான். தூய புனிதமான உறவுகள் என்று எதுவும் கிடையாது. எல்லா உறவுகளும் இராணுவ, பொருளாதார, அரசியல் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கிலானவை தான்.

உதாரணமாக சீனாவின் உதவிகளை எடுத்துக் கொள்வோம். சில மாதங்களுக்கு முன்பு ஒரு மெய்நிகர் சந்திப்பின் போது பேராசிரியர் அமிர்தலிங்கம் அதனைச் சுட்டிக் காட்டினார். சிங்கள மக்களில் பெரும்பாலானவர்கள் சீனாவைத் தமது நட்பு நாடாக கருதுகிறார்கள். ஆனால் சீனா ஒரு நண்பனாக இலங்கைக்கு உதவவில்லை. அப்படி உதவியிருந்திருந்தால் அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99ஆண்டு கால குத்தகைக்கு எழுதி வாங்கியிருக்காது. நண்பர்களுக்கு கொடுக்கும் கடனை அறவிடும் பொழுது அதற்கு பதிலாக ஈடாக காணியை நகையை கேட்பது நட்புக்கு அழகு அல்ல.

எனவே சீனா ஹம்பாந்தோட்டை விடயத்தில் ஒரு நட்பு நாடாக நடக்கவில்லை. அது தனது ராணுவ பொருளாதார அரசியல் இலக்குகளை முன் வைத்து அம்பாந்தோட்டை துறைமுகத்தை குத்தகைக்கு எழுதி வாங்கிக் கொண்டது. இது தான் அரசியல். இது தான் அரசியல் பொருளாதாரம். சீனா மட்டுமல்ல அமெரிக்காவும் அப்படித்தான்.

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக வரும்பொழுது அமெரிக்காவுடனான மில்லினியம் சலேன்ச் உடன்படிக்கையை ரத்து செய்வேன் என்று சிங்கள மக்களுக்கு வாக்குறுதி வழங்கியிருந்தார். அவர் ஜனாதிபதியாக வந்தவுடன் இந்தியாவுக்கு முதலில் விஜயம் செய்தார். அப்பொழுது இந்தியா அவருக்கு ஒரு தொகுதி பணத்தைக் கடனாக வழங்கியது. அது மில்லினியம் சலேன்ச் உடன்படிக்கையின் கீழ் வழங்கப்படவிருந்த நிதி உதவிக்கு கிட்ட வருகிறது.

ரஷ்யா உக்ரேன் உட்பட போல்கன் நாடுகளை எப்படி பார்க்கின்றதோ அப்படி. எனவே இப்பிராந்தியத்தில் உள்ள ஈழத்தமிழர்களுக்கு வழங்க கூடிய எந்த ஒரு தீர்வையும் இந்தியா ஈழத் தமிழர்களின் நோக்கு நிலையிலிருந்து அணுகாது. தன்னுடைய பிராந்திய புவிசார் நோக்கு நிலையில் இருந்தே அணுகும்.

இது தொடர்பாக ஒரு சுயாதீன ஊடகவியலாளர் அமெரிக்க இராஜதந்திரி ஒருவருடன் உரையாடும் பொழுது நீங்கள் கொடுக்க விரும்பிய தொகைக்கு ஈடான ஒரு தொகையை இந்தியா வழங்கி இருக்கிறதே என்று சுட்டிக் காட்டினார். அந்த ராஜதந்திரி சிரித்துக் கொண்டே சொன்னார் "இந்தியா கொடுப்பது கடன் நாங்கள் கொடுக்க முன் வந்தது நன்கொடை" என்று.

அதற்கு அந்த ஊடகவியலாளர் மீண்டும் கேட்டார் "மில்லினியம் சலேன்ச் உடன்படிக்கை எனப்படுவது நாட்டுக்கு பாதகமானது என்று அரசாங்கம் கூறுகிறது. நாட்டில் உள்ள காணிகளின் உரிமை யார் யாருக்கு உண்டு என்பது தொடர்பான டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட தகவல்களை அமெரிக்கா கேட்பதாக அவர்கள் கூறுகிறார்கள்" என்று

அதற்கு அந்த ராஜதந்திரி திருப்பிக் கேட்டார் "அதில் என்ன தவறு? உலகம் முழுவதும் மில்லினியம் சலேன்ச் உடன்படிக்கை எனப்படுவது அவ்வாறான நிபந்தனைகளின் அடிப்படையில் தான் வழங்கப்படுகிறது" என்று. ஒரு சிறிய நாட்டின் காணி உரிமையாளர்கள் தொடர்பான டிஜிட்டல் ஆவணங்களை ஒரு பெரிய நாடு தன்னிடம் தருமாறு கேட்கிறது என்பதே இராணுவ பொருளாதார அரசியல் நலன் சார்ந்த நோக்கு நிலையில் இருந்து தான்.

எனவே ஒரு நாடு இன்னொரு நாட்டுக்கு உதவி செய்யும் பொழுது அதில் அறநெறிகள் தர்மம் என்பவற்றை விடவும் நலன் சார்ந்த பேரங்கள்தான் அதிகம் இருக்கும். ராஜதந்திரத்தின் இந்த பால பாடத்தை ஈழத்தமிழர்கள் கற்றுத் தேற வேண்டும். இந்த பூமியில் எந்த ஒரு அரசும் அல்லது அரசு சார்பற்ற நிறுவனமும் ஏனைய நிறுவனங்களோடு அல்லது அரசுகளோடு கொள்ளும் உறவென்பது நலன்சார் அடிப்படையில் தான் அமையும். இதில் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியா இப்பிராந்தியத்தை தன்னுடைய செல்வாக்கு மண்டலமாக — spear of influence — நம்புகின்றது.

இது விடயத்தில் ஈழத் தமிழர்கள் தான் தமது நலன்சார் நோக்கு நிலையிலிருந்து தமது கோரிக்கைகளை உச்சமாக முன்வைக்க வேண்டும். அவற்றுக்காக போராட வேண்டும். அவற்றுக்காக பேரம் பேச வேண்டும்.

பேரம் பேசத் தேவையான பலத்தை அதிகப்படுத்த வேண்டும். பேரம் பேசுவது என்றால் முதலில் ஈழத்தமிழர்கள் ஒரு பல மையமாக — power source — ஆக மாறுவது தான். அரசியலில் அதிக மக்கள் ஆணையை பெற்ற ஒரு கட்சி தான் அதற்கான அடிப்படைகளைக் கொண்டிருக்கும்.

கூட்டமைப்புக்கு உள்ள அடிப்படை பலம் அது தான். கூட்டமைப்பின் இராஜதந்திர நடைமுறைகளை அல்லது ஆறு கட்சிகள் இந்தியாவுக்கு கடிதம் எழுதியதை தவறு என்று கருதும் ஏனைய கட்சிகள் தாம் எப்படி ஒரு பல மையமாக மாறுவது எப்படி என்று சிந்திக்க வேண்டும். அதன் மூலம்தான் அவர்கள் தாங்கள் மனதில் வைத்திருக்கும் ராஜதந்திர வழி வரைபடத்தை நடைமுறைப்படுத்தலாம். இராஜதந்திரம் எனப்படுவது இரண்டு பல மையங்களுக்கு இடையிலான இடையூடாட்டம் தான். சிறிய கட்சிகள் எல்லாவற்றையும் எதிர்க்கலாம். ஆனால் ஒரு மக்கள் கூட்டத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதற்கு அவர்கள் ஒரு பல மையமாக மாற வேண்டும்.

இப்பூமியானது தர்மத்தின் அச்சில் சுற்றுவதில்லை. அறநெறிகள் கர்ம வினைப் பயன்கள் போன்றன நவீன அரசியலில் எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை. அண்மை வாரங்களாக தென்னிலங்கையில் நடக்கும் ஆர்ப்பாட்டங்களை குறித்து தமிழர்களில் ஒரு பகுதியினர் சமூக வலைத்தளங்களில் பகிரும் செய்திகளை பார்த்தால் அறநெறிகள் கர்ம வினைப் பயன் போன்றவற்றுக்கு ஊடாகவே அவர்கள் அரசியலை விளங்கிக் வைத்திருப்பதாக தெரிகிறது.

எந்த ராஜபக்சக்கள் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை தோற்கடித்தார்களோ அதே ராஜபக்சவை வீட்டுக்கு போ என்று சிங்கள மக்கள் கேட்கிறார்கள். எந்த ராஜபக்சக்கள் தமிழ் மக்களை தோற்கடித்த பொழுது சிங்கள மக்கள் கிரிபத் சமைத்து கொண்டாடினார்களோ அதே ராஜபக்சவை வீட்டுக்கு போ என்று கேட்டு சவப்பெட்டி பாண் போன்றவற்றை கைகளில் ஏந்தியபடி ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். எந்த ராஜபக்ச போன்ற ஒரு இரும்பு மனிதர் ஜனாதிபதியாக வர வேண்டும் என்று விரும்பி அவருக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கினார்களோ, அவரையே வீட்டுக்கு போ என்று கேட்கிறார்களாம்.

இவற்றையெல்லாம் பார்த்து ஒரு பகுதி தமிழ்மக்கள் கர்மவினைப் பயன் அதுவென்று கூற முன் வருகிறார்கள். ஈழத்தமிழர்களுக்கு இழைத்த குற்றங்களுக்கு தண்டனை வழங்கப்படுகிறது என்று கூறி பழி வாங்கியவனுக்கு உண்டாகும் திருப்தியோடு அக்காட்சிகளை ரசிக்கிறார்கள்.

ஆனால் இப்பொழுது நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி என்பது சிங்கள மக்களுக்கு மட்டுமல்ல தமிழ் முஸ்லிம் மக்களுக்கும் சேர்த்துத் தான். தவிர இதில் கர்ம வினைப்பயன் என்பதெல்லாம் கிடையாது. அரசியலை அப்படி அப்பாவித்தனமாக விளங்கிக் கொள்ள தேவையில்லை.

ராஜபக்சக்கள் மறுபடியும் யுத்த வெற்றியை கையில் அடுத்து நிலைமைகளைத் தலைகீழாக்க முடியும். எனவே தமிழ் மக்கள் கர்ம வினைப் பயன் போன்ற அறம் சார்ந்த மதம் சார்ந்த சிந்தனைகளுக்கூடாக அரசியலை அப்பாவித்தனமாக விளங்கிக் கொள்ளக் கூடாது. மாறாக நலன்சார்ந்த பேர அரசியலுக்கு ஊடாகவே உரிமைகளை வென்றெடுக்கலாம் என்ற அடிப்படை விதியை கற்றுக்கொள்ள வேண்டும். கடந்த பல தசாப்த கால அரசியல் தமிழ் மக்களுக்கு போதிப்பது அதனை தான்.

MASTER MATRIMONY
திருமண பொருத்தம்
உங்கள் பிள்ளைகளின் சகல விதமான
அடிப்படைகளையும் கருத்தில் கொண்டு,
உங்களினதும் உங்கள் பிள்ளைகளினதும்
விருப்பங்களிற்கிணங்க சேவை
நடைமுறைப் படுத்தப்படும்.
குறிப்பு: ஜாதகப் பொருத்தம் தேவைப்படின்,
இலவச கணிப்பீடு செய்து தரப்படும்.
Cell: 647 967 3636, Cell: 514 295 6695
Email: rajthevmaster123@gmail.com

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! மனதில் ஏதாவது ஒரு கவலை உண்டாகும். சொத்துக்கள் சம்பந்தமான காரிய அனுகூலம் ஏற்படும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். புதிய ஆர்டர்கள் தொடர்பாக அலையும் படி இருந்தாலும் சாதகமாக முடியும். பணவரத்து திருப்தி தரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான பணிகளில் முழு மூச்சுடன் செயல்பட்டு முன்னேற்றம் காண்பார்கள். கணவன், மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும். உறவினர் கள் நண்பர்கள் மூலம் நன்மை நடக்கும். பெண்கள் மனதிருப்தியுடன் காரியங்களை செய்து சாதகமான பலன் பெறுவர். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும்.




ரிஷபராசி அன்பர்களே! எவ்வளவு திறமையுடன் செயல்பட்டாலும் காரிய தடங்கல் ஏற்படலாம். அடுத்தவருக்கு உதவிகள் செய்யும் போது கவனம் தேவை. பயணத்தினால் வீண் செலவும், அலைச்சலும் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். வியாபார போட்டிகள் குறையும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்க பெறுவர். பணி நிமித்தமாக வெளிநாடு செல்ல வேண்டி வரும். குடும்பத்துடன் விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். குழந்தைகள் உற்சாகமாக காணப்படுவர். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். பெண்களுக்கு எடுத்த காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும்.




மிதுனராசி அன்பர்களே! புத்திசாதுரியம் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதன் மூலம் மற்றவர்களிடம் மதிப்பு கூடும். பாராட்டு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணவரத்து இருக்கும். பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். சக ஊழியர்களிடம் அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தில் சந்தோஷமான நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பிள்ளைகள் மனம் மகிழும்படி தேவையான பொருட்களை வாங்கி கொடுப்பீர்கள். அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வது நன்மை தரும்.




கடகராசி அன்பர்களே! நல்ல திருப்பங்கள் ஏற்படும். ஆன்மிகத்தில் நாட்டம் உண்டாகும். மனோ தைரியம் அதிகரிக்கும். புத்தி தெளிவு உண்டாகும். தொழில் வியாபாரம் வாக்கு வன்மையால் சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர். உத்யோகம் தொடர்பான பயணங்கள் செல்ல நேரலாம். மேலதிகாரிகள் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். சொந்த விஷயங்களுக்கு அடுத்தவர் ஆலோசனைகளை கேட்பதை தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவி மனம் விட்டு பேசுவதன் மூலம் இடைவெளி குறையும். பிள்ளைகள் நலனுக்காக செலவுகள் செய்ய வேண்டி இருக்கும். பெண்கள் எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. எதிர்பாராமல் பயணத்தில் தடங்கல் ஏற்படலாம்.




சிம்மராசி அன்பர்களே! சுபகாரியங்கள் நடைபெறும். வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கை தேவை. தாயின் உடல்நிலையில் கவனம் அவசியம். திட்டமிட்டபடி காரியங்களை செய்ய முடியாமல் தடங்கல்கள் ஏற்படலாம். எனவே எந்த ஒரு வேலையை செய்வதாக இருந்தாலும் தகுந்த முன்னேற்பாடுகள் தேவை. தொழில் வியாபாரம் திருப்தியாக நடக்கும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் அலுவலக வேலையாக அலைய வேண்டி இருக்கும். புதிய பொறுப்புகள் சிலருக்கு கிடைக்கலாம். குடும்பத்தில் இருந்து வந்த மனம் நோகும்படியான சூழ்நிலைகள் மாறும். உறவினர்களை அனுசரித்து செல்வது நல்லது. எல்லாவற்றிலும் இருந்து வந்த மனகவலை நீங்கும். வெள்ளி, செவ்வாய் ஆலய வழிபாடு செய்யவும்.




கன்னி ராசி அன்பர்களே! அடுத்தவர்களுக்கு உதவுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். எதிர் பாலினத்தாரால் செலவு ஏற்படும். கோபத்தால் சில்லறை சண்டைகள் ஏற்படலாம். பணவரத்து கூடும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். தொழில் தொடர்பான விஷயங்கள் அனுகூலமாக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பர். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். பிள்ளைகள் மகிழ்ச்சியடைய தேவையானவற்றை செய்வீர்கள். பெண்கள் நிதானமாக பேசுவது நன்மை தரும். எதிர்பார்த்த தகவல்கள் வரும். விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் திருப்தி உண்டாகும். காரிய அனுகூலம் உண்டாகும்.






துலாம்ராசி அன்பர்களே! வீண் செலவுகள் அகலும். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். பெரியோர் நேசம் கிடைக்கும். வாகன யோகம் உண்டாகும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண புதிய திட்டம் அவசியம். புதிய ஆர்டர்கள் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் உற்சாகமாக செயல்பட்டு வேலைகளை உடனுக்குடன் செய்து முடிப்பர். புதிய பதவி அல்லது பொறுப்புகள் கிடைக்கும். குடும்பத்தில் சகஜநிலை காணப்படும். உறவினர்கள் மூலம் நல்ல தகவல் வந்து சேரும். கணவன் மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும். குடும்பத்தினருடன் ஆன்மிக பயணம் செல்வீர்கள். மற்றவர்கள் ஆலோசனை கேட்டு உங்களை நாடி வருவர். பெண்கள் எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பர்.




விருச்சிகராசி அன்பர்களே1 அதிர்ஷ்டங்கள் ஏற்படும். விருப்பங்கள் கைகூடும். நண்பர்கள் மத்தியில் மரியாதையும் அந்தஸ்தும் உயரும். மற்றவர்களிடம் பேசும் போது கோபத்தை குறைத்து பேசுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். அரசாங்கம் மூலம் நடக்க வேண் டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும். எதிர் பார்த்த பண உதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு வெற்றி பெறுவர். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். கண வன் மனைவிக்கிடையே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. புதிய நபர்களின் அறி முகம் கிடைக்கும். பெண்களுக்கு மனம் மகிழும்படியான காரியங்கள் நடக்கும். மாணவர்கள் பாடங்களை கவனத்துடன் படிப்பது அவசியம். நல்ல வாய்ப்புகள் வரும்.




தனுசுராசி அன்பர்களே! உழைக்கும் திறன் அதிகரிக்கும். எதிர்பார்த்தபடி எதுவும் நடக்காமல் இழுபறியாக இருக்கும். ஆனாலும் மனம் மகிழும்படியாக எல்லாம் நடந்து முடியும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடக்கும். நயமாக பேசுவதன் மூலம் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வேலை பார்க்கும் இடத்தில் பொருள்களை கவனமாக பாதுகாப்பாக வைப்பது நல்லது. குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை காணப்படும். உங்கள் சொல்படி பிள்ளைகள் நடந்து கொள்வது மனதுக்கு இதமளிக்கும். பெண்கள் உதவி கேட்டு நாடி வருபவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து நன்மதிப்பை பெறுவீர்கள். வருமானம் உயர வழி பிறக்கும்.




மகரராசி அன்பர்களே! எல்லாவகையிலும் நல்லதே நடக்கும். அனுகூலமான பலன் உண்டாகும். எதிர்ப்புகள் விலகும். விரும்பிய காரியங்களை செய்து சாதகமான பலன் கிடைக்க பெறுவீர்கள். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். விற்பனை அதிகரிக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும்.உத்யோகத்தில் இருப்பவர்கள் புத்தி சாதூரியத்தால் வேலைகளை திறமையாக செய்து முடித்து பாராட்டு பெறுவர். குடும்பத்தில் இருந்த குழப்பம் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மன வருத்தம் நீங்கும். பிள்ளைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொடுப்பீர்கள். பெண்களுக்கு காரியங்களில் இருந்த பின்னடைவு நீங்கும். எதிர்பார்த்த பண வரவு இருக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர்.




கும்பராசி அன்பர்களே! எல்லாவகையிலும் நல்லதே நடக்கும். அனுகூலமான பலன் உண்டாகும். எதிர்ப்புகள் விலகும். விரும்பிய காரியங்களை செய்து சாதகமான பலன் கிடைக்க பெறுவீர்கள். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். விற்பனை அதிகரிக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் புத்தி சாதூரியத்தால் வேலைகளை திறமையாக செய்து முடித்து பாராட்டு பெறுவர். குடும்பத்தில் இருந்த குழப்பம் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மன வருத்தம் நீங்கும். பிள்ளைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொடுப்பீர்கள். பெண்களுக்கு காரியங்களில் இருந்த பின்னடைவு நீங்கும். எதிர் பார்த்த பணவரவு இருக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர்.




மீனராசி அன்பர்களே! பேச்சின் இனிமையால் காரியம் கைகூடும். சுப பலன்கள் ஏற்படும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும் என்ற தன்னம்பிக்கை ஏற்படும். சரக்குகளை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் போது கவனம் தேவை. உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி வரும். அலுவலக வேலைகள் உடனே முடியாமல் இழுபறியாக இருக்கும். விருந்து நிகழ்ச்சியில் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். குழந்தைகளின் செயல்களால் பெருமை அடைவீர்கள். பெண்களுக்கு திடீர் செலவு உண்டாகலாம். காரியங்களில் தடை தாமதம் ஏற்படலாம் கவனம் தேவை. எதிர்பார்த்த பணம் வந்து சேரும்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
ஈழநாடு 29வது ஆண்டு விழா
ஒரு மேடையில் இரு நிகழ்வுகள்
ஈழத்து – தமிழக இசை வேந்தர்கள்!
சங்கீத சங்கமம் 2022
07 ஆகஸ்ட் 2022 மாலை 5.00 மணி

ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

SRI AYYAPPA SAMAJAM OF ONTARIO
SWAMI SARANAM

# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்
# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8, Tel: 416-321-6104



## ஸ்ரீ ஐயப்ப சுவாமி விசுக்கனி அலங்கார உற்சவமும் ஐயப்பன் விரத மாலை அணிதலும்

**காலம்: 31.03.2022 வியாழக்கிழமை முதல் 17.04.2022 ஞாயிற்றுக்கிழமை வரை**

"ஐயனை நாடுங்கள்! அவன் புகழ் பாடுங்கள்! என்றும் புகழோடு வாழ வைப்பான் ஐயப்பன்"

ஐயப்பன் மெய்யடியார்களே!

மகர மண்டல விரதத்திற்கு மாலை அணிந்து விரதமிருப்பதைப் போன்று விசுக்கனி தரிசனத்திற்காக மாலை அணிந்து விரதமிருக்கின்ற மரபு ஸ்ரீ ஐயப்பன் வழிபாட்டில் சிறப்பு நடைமுறையாகும்.

31.03.2022 வியாழக்கிழமை காலை 7:00 மணிக்கு கணபதி ஹோமத்துடன் விசுக்கனி அலங்கார உற்சவம் ஆரம்பமாகும். 17.04.2022 ஞாயிற்றுக்கிழமை வைரவர் மடை வரை காலை, மாலை சிறப்பு அபிஷேகம், சிறப்பு பூஜை, படிப்பூஜை, வசந்தமண்டப பூஜை, சுவாமி புறப்பாடு என்பன நடைபெற உள்ளதால், அடியார்கள், மாலை அணிந்து விரதமிருக்கும் சுவாமிமார்கள், தினமும் காலை, மாலை திருவிழா உபயம் செய்வோர் ஆலயத்தில் பதிவு செய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

### உற்சவ கால நிகழ்ச்சி நிரல்

சிறப்பு அபிஷேகம் காலை 10:00 மணிக்கும், மாலை 6:00 மணிக்கும், காலைப் பூஜை 11:00 மணிக்கும், மாலைப்பூஜை 7:30 மணிக்கும், சுவாமி புறப்பாடு மதியம் 12:00 மணிக்கும், மாலை 8:30 மணிக்கும் நடைபெறும்.

### விசுக்கனி ஸ்ரீ ஐயப்பன் விரத மாலையணிதல்

31.03.2022 வியாழக்கிழமை காலை 7:00 மணிமுதல் மதியம் வரை, மாலை 6:00 மணி முதல் இரவு 9:00 மணிவரை விசுக்கனிக்காக ஐயப்பன் விரத மாலை அணிந்து கொள்ளும் சுவாமிமார்கள் ஆலய குருசுவாமி கைகளால் மாலை அணிந்து கொள்ளலாம்.

### நெய் நிரப்புதல்

10.04.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8:00 மணி முதல் மதியம் வரை நெய் நிரப்புதல் வைபவம் இடம்பெறும்

### சுவாமிமார்களின் நெய்யபிஷேகம்

14.04.2022 வியாழக்கிழமை காலை 7:00 மணிக்கு இருமுடி சுமந்து, 18 படிகள் ஏறி சுவாமிமார்களின் நெய்யபிஷேகம் நடைபெறும்.
புதுவருடப்பிறப்புப் பூஜை 13.04.2022 புதன்கிழமை மாலை 10:19 மணிக்கு நடைபெறும்.
14.04.2022 வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், புதுவருட பூஜையும் இடம் பெறும்.

இறைபணியிலுள்ள அறங்காவல் சபையினர்





# Amma Pawn Broker
# அம்மா தங்கநகை அடைவு மாடம்



கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

**1.0% முதல் 1.5% வரை**

## அதிரடி சிறப்பு வட்டி வீதம்

உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



**அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!**

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
HOMELIFE HIGHER STANDARDS
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
KABIS
416-357-2847
kulasingam33@yahoo.ca
• Life Insurance
• Critical Illness
• Disability
• RESP
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
IA INDUSTRIAL ALLIANCE
Assumption Life


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE HIGHER STANDARDS
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


காப்புறுதிச் சேவையில் 20 ஆண்டுகள்
ஆதரவு தந்த அனைவருக்கும்
நெஞ்சார்ந்த நன்றி
DISABILITY INSURANCE
SUPER VISAS
NON-MEDICAL INSURANCE
CRITICAL ILLNESS
RRSP & RESP
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
647 401 5800 / 416 439 2800
218 EXPORT BLVD, MISSISSAUGA, SUITE 209-211, L5S 0A7